





# ஞானச்சுடர்

மாசி

## மலர் 2005

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ



## குறள் வழி

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

பொருள்:- ஒருவனைக் கெடுக்கக்கூடியது ஆசை; ஆதலால்; அவ்வாசைக்கு அஞ்சி அதனைத் தடுப்பதே அறம். (366)




## நற்சிந்தனை

### குதம்பாய்- 5

கங்கைச் சடையுடைய கடவுளைக் கும்பிட்டாற்
பங்கந்தான் வந்திடுமோ - குதம்பாய்
பங்கந்தான் வந்திடுமோ

எங்குஞ் சிவனடியைக் கண்டிறைஞ்சும் மாதவர்க்குக்
கங்குல் பகலுண்டோ - குதம்பாய்
கங்குல் பகலுண்டோ

சத்திசிவ மொன்றான தன்மையைக் கண்டுவிட்டால்
நித்தியவாழ் வாகுமடி - குதம்பாய்
நித்தியவாழ் வாகுமடி.


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 86

2005 மாசி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| மனித கூர்ப்பும் இந்து.... | கா. கணேசதாசன் J.P | 1 - 2 |
| அருணகிரி நாதரின்...... | ஆ. கதிர்காமத்தம்பி | 3 - 6 |
| புகழ்ச்சோழ நாயனார் | க. சிவசங்கரநாதன் | 7 - 8 |
| பார்வதி பரமேஸ்வரன்..... | பா. சிவனேஸ்வரி | 9 - 13 |
| சமய வாழ்வுக்கு கல்வி... | கனக. நாகேஸ்வரன் எம். ஏ | 14 - 17 |
| திருக்குறள்- திருவாசகம்.... | கஸ்தூரிராஜா | 18 - 20 |
| அருணகிரி பாடும்.... | க. தெய்வேந்திரம் A.I.J.P | 21 - 22 |
| சிவபக்தியில் சிறப்புப்.... | நா. நல்லதம்பி | 23 - 25 |
| சிவராத்திரியில் வழிபடும்... | காரை எம்.பி. அருளானந்தன் | - 26 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய... | சி. வேலாயுதம் | 27 - 28 |
| மானுடத்தை மேன்மைப்.... | வ. குமாரசாமிஐயர் | 29 - 32 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 33 - 35 |
| யார் இந்த (ச) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 36 - 38 |
| நித்திய அன்னப்பணி.. | | 39 - 40 |
| சுனாமியேன் வந்ததிங்கே? | மு. திருநாவுக்கரசு | 41 - 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 46 |
| அகவை எட்டைக்..... | சி.சி. வரதராசா J.P | - 47 |
| வாசகர் போட்டிக்கான... | | - 48 |



அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ

# ஞானச்சுடர்
# தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

வழமைபோல .தைமாத மலருக்கான வெளியீட்டுரையை ஆறு திருமுருகன் அவர்கள் வழங்கினார்கள். ஆச்சிரமத்தினதும் பேரவையினதும் செயற்பாடுகள் இன்று கடல்கடந்த பிரதேசங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பதை அடியார்களுக்கு எடுத்துக்கூறினார்கள். தான் செல்லுகின்ற வெளிநாடுகளின் சமய நிறுவனங்கள் முக்கியமான சமயப்பெரியார்களின் வீடுகளில் ஞானச்சுடர் காணப்படுவதையும் அதனை புனிதமான ஒரு நூலாக அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருப்பதாயும் குறிப்பிட்டார்கள்.

ஆச்சிரமம் மேற்கொண்டுவருகின்ற பல்வேறு சமூகப்பணிகளையும் எடுத்துக்காட்டிய ஆறு திருமுருகன் அவர்கள் உண்மையான சமூக சமயப் பணிகள் ஆற்றிவருகின்ற அமைப்பாக இன்று அனைவராலும் பாராட்டப்படும் நிலையில் சந்நிதியான் ஆச்சிரமம் வருவதையும் எடுத்துக்காட்டினார்கள்.

## மதிப்பீட்டுரை:-

மதிப்பீட்டுரையை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் வழமைபோல மேற்கொண்டார்கள். இங்கே நடைபெறுகின்ற காரியங்கள் அனைத்தும் சந்நிதியானின் திருவருளாலேயே இடம்பெற்றுக்கொண்டிருக்கிறதென்றும் அதனால் தான் ஆச்சிரமமும் பேரவையும் மேற்கொள்ளுகின்ற அனைத்துச் செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றதென்றும் அடியார்களுக்கு எடுத்துக்கூறினார்கள்.

ஞானச்சுடரின் அட்டைப்படம் அதன் ஆரம்பம் உள்ளடக்கம் என்பவற்றை எல்லாம் எடுத்துக்காட்டி அதற்குள் பொதிந்துள்ள சிறப்புக்களையும் குறிப்பிட்டுக்காட்டினார்கள். இயற்கைக்கு மனிதன் மதிப்பு அளிக்கவேண்டியதன் அவசியத்தையும் எமது முன்னோர்கள் இயற்கையை தெய்வமாக வழிபட்டு வந்த வழக்கத்தையும் உதாரணங்கள் மூலம் கூறி அதனை தொடர்ந்தும் நாம் செயற்படுத்த வேண்டும் என்பதையும் அடியார்களுக்கு விளக்கிக் கூறினார்கள்.

சுடரில் இடம்பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றையும்பற்றி மதிப்புரை செய்து அவற்றின் சிறப்புக்களையும் வெளிப்படுத்தி தனது மதிப்புரையை நிறைவு செய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

மனித வாழ்க்கையில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. இந்த வகையில் எமது மண்ணிலும் சமூக, பொருளாதார அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுச்செல்வதை நாம் பார்க்கின்றோம். இம்மாற்றங்கள் சிலபேருக்கு நன்மை அளிப்பதாகவும் அதே மாற்றங்கள் சிலபேருக்கு தீமையளித்துள்ளதையும் நாம் காண்கின்றோம். உதாரணமாக அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள விடுதலை உணர்வு யுத்தசூழலுக்கும் அந்த யுத்தசூழல் பலபேருக்கு உயிரிழப்பு உட்பட பல்வேறு வகையான இழப்புக்களை ஏற்படுத்தி மிகவும் பாரதூரமான விளைவுகளையும் பரிதாபகரமான நிலையையும் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம் இந்த அரசியல் ரீதியான யுத்தம் பலபேருக்கு வெளிநாட்டுப் புலப்பெயர்வையும் அதனூடாக பொருளாதாரம் உட்பட பல சாதகமான விளைவுகளையும் உயர்வான வாழ்க்கை நிலையையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

குடும்ப வாழ்க்கையில் கூட்டுக்குடும்பம், தர்ம நெறியில் வாழும் பண்பு போன்றவை பெருமளவுக்கு மாற்றப்பட்டு பணம் தேடும் பண்பே முனைப்புப் பெற்று நிற்பதையும் காணமுடிகின்றது.

எமக்கு முன்னைய சந்ததியினர் தமது வாழ்க்கையில் மனிதநேயம் கொண்டவர்களாய் தர்ம நெறியைக் கடைப்பிடிப்பவர்களாய் வாழ்ந்துள்ளனர். அத்துடன் உண்மை, நேர்மை என்பவற்றைக் கடைப்பிடித்து சமுகத்தில் மற்றவர்களையும் மதித்து தமது வாழ்க்கையை நடாத்தியுள்ளனர்.

ஆத்மீக ரீதியில் நோக்கினால் எமது முன்னோர்கள் வாழும்பொழுதே தர்மமான காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். ஏழைகளுக்கு உணவளித்தல் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்குக்கூட வீட்டிற்கு வெளியே தண்ணீர்த் தொட்டி அமைத்து தாகசாந்தி செய்தல், அயலவனை நேசித்தல், ஆலயத்தில் உண்மையான வழிபாடு செய்தல் போன்றவற்றைச் செய்ததுடன் தாம் இறந்த பின்பும் தர்மமே தமக்குத் துணையாக வரும் என்று நினைத்து தமது சொத்துக்களை, காணிகளை ஆலயங்களுக்கு, அவற்றின் பராமரிப்பிற்காக எழுதிக் கொடுத்துள்ளனர்.

இன்று இவ்வாறான பண்புகள் எல்லாம் அருகி வருகின்றன. இது பல வகைப்பட்டவர்களாலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தப்பண்புகள் குறைவடைந்து செல்வதால் மனிதநேயம் மறைந்து செல்வதுடன் மனிதன் நிம்மதியற்ற வாழ்க்கையை வாழவேண்டியுள்ளது.

மக்கள் தமது சொத்துக்களை, காணிகளை தர்ம காரியங்களுக்கோ, ஆலயங்களுக்கோ எழுதிக் கொடுப்பதை அறியமுடியாதுள்ளது. மாறாக பொதுச் சொத்துக்களையும் ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும், காணிகளையும் மக்கள் அபகரிப்பதைக்கூட பல இடங்களில் காணமுடிகின்றது. ஆகவே நாம் எங்கே சென்றுகொண்டிருக்கின்றோம் என்பதை நாங்களே உணர்ந்துகொள்வது நல்லது.

உ

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர்

## விபரம்

**M. இந்திரசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**சு. ரவீந்திரன்**
(அவுஸ்திரேலியா)

**செ. சம்பந்தநாதன்**
(லண்டன்)

**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலை வீதி, கோண்டாவில்)

**இ. குணராஜா**
(கரந்தன் வீதி, ஊரெழு கிழக்கு)

**நா. கதிர்காமநாதன்**
(இளைப்பாறிய கணக்காய்வாளர் கொழும்பு)

**பொ. தெய்வேந்திரம்**
(பிரதம தபாலதிபர் சாவகச்சேரி)

**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம் அல்வாய்)

**V. R. கனகராசா**
(ஆளணி முகாமையாளர், இ.போ.ச)

**ம. இரங்கநாதன்** (ஆசிரியர்)
(நெல்லியோடை அச்சுவேலி)

**திரு த. விவேகானந்தன்**
(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)

**திரு நா. சந்திரசேகரம்** (பொருளாளர்)
(வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அல்வாய்)

**திரு சி. பத்மநாதன் J. P**
(கனன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை)

**திரு பொ. ஸ்ரீஇராமச்சந்திரன்**
(பொது முகாமையாளர் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச)

**திரு தா. கெங்காதரன்**
(கஜன் மோட்டோர்ஸ் ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்)

**திரு V. S. P குமார் [ஸ்ரீகுமார்]**
(உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி)
**திரு சு. இராமச்சந்திரன்** (நிர்வாகி)
(ரலன்ற் கல்வி நிறுவனம் கரவெட்டி)
**திரு சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை நெல்லியடி)
**திரு வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**உரிமையாளர்**
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)
**திரு க. இரத்தினசிங்கம் J. P**
(இளை. கிராமசேவையாளர் கரணவாய் மத்தி)
**திரு க. குணலிங்கம்**
(கரணவாய் மத்தி)
**திரு என். இரவீந்திரன்**
(மக்கள் வங்கி உதவி முகாமையாளர் உரும்பராய்)
**திரு க. யோகேந்திரநாதன்**
(கிராம உத்தியோகத்தர் குடத்தனை)
**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்**
(303, K.K.S வீதி யாழ்ப்பாணம்)
**திரு செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம் உடுப்பிட்டி)
**லயன் அ.த.க. கிருஸ்ணராஜா**
(சமாதான நீதவான் உரும்பராய்)
**திரு சி. பஞ்சலிங்கம்**
(ஞான வைரவர் கோயிலடி, உரும்பராய் கிழக்கு)
**செல்வி தெவேந்திரா சௌமியா**
(ஒஸ்கா வீதி, உரும்பராய்)
**திரு இ. குமாரதாஸன்**
(இளைப்பாறிய பிராந்திய மருந்தாளர் யாழ்)
**திரு சி. குகதாஸன்**
(தேவாலய வீதி, சங்கானை)
**உரிமையாளர்**
(உதயா பேக்ஹவுஸ் வல்லை வீதி, சங்கானை)

**திருமதி த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர் மயிலியதனை தொண்டைமானாறு)
**அதிபர்**
(தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)
**திரு பொ. வீரபாகு**
(பத்தமேனி அச்சுவேலி)
**திரு ச. தங்கராசா J. P**
(சிறுப்பிட்டி)
**திரு சி. மகாலிங்கம் J. P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
**திரு சு. சிவதாசன் G. S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**தலைவர் - செயலாளர்**
(கலைவாணி ச.ச. நிலையம் தொண்டைமானாறு)
**திரு சு. செல்வரெத்தினம்**
(K.K.S வீதி, சுன்னாகம்)
**உரிமையாளர்**
(ஜெயகிருஸ்ணா K.K.S வீதி சுன்னாகம்)
**உரிமையாளர்**
(புகழ் ஸ்ரோர்ஸ் K.K.S வீதி சுன்னாகம்)
**திரு ஐ. லோகஞானம்**
(பிரதம அஞ்சல் அதிபர் சுன்னாகம்)
**உரிமையாளர்**
(உதயன் விற்பனை நிலையம் சங்கானை)
**புவனேஸ்வரி பாலகிருஸ்ணன்**
(தேவாலய வீதி, சங்கானை)
**கந்தையா வைத்தியநாதன்**
(கிராம அலுவலர் சிறுப்பிட்டி)
**S. தியாகராஜா**
(S.T.R. பிலிம்ஸ் கொழும்பு)
**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர் சுண்ணாகம்)
**செ. நவரெத்தினராசா J. P**
(கப்புது குப்பிளான்)
**V. அரியராசா**
(இளை, வரைவல்லுனர்)

உ

# மனித கூர்ப்பும் இந்து சமயத்தின் கூற்றும்

திரு. கா. கணேசதாசன். J.P. அவர்கள்

ஓர் உயிரிலிருந்து மாறுதல்களுடன் புதிய சந்ததி ஒன்று தோன்றும் செயற்தொடரே கூர்ப்பு அல்லது பரிணாம வளர்ச்சி ஆகும்.

டார்வின் போன்ற விஞ்ஞானிகள் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே எமது இந்துமதம் தெளிவாக அதனை விளக்கியுள்ளது.

இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவ சமயத்தின் முதற்கடவுளின் பெயர் சிவன். இந்தப் பெயர் ஜீவன் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ஜீவன் என்றால் உயிர். எனவே உயிரிலிருந்து கடவுள் தோன்றியிருக்கலாம் எனக் கருதலாம். மேலும் பிற்காலத்தவறான மாணிக்கவாசகர் தமது திருவாசகப் பாடல்களிலே

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன்"

என்று கூறுகிறார்.

உலகிலே உயிரினம் முதலிலே புற்களாகவும், பின்னர் பூண்டு மரம் என்பனவாக படிப்படியாக கூர்ப்பித்து பலவகை மிருகங்களாகவும், பின் பறவைகளாகவும், பாம்பு போன்ற நகருயிர்களாகவும், கல்வியறிவு பெற்ற மனிதராகவும் பரிணாம வளர்ச்சியடைந்து வந்த ஒழுங்கு இப்பாடலில் கூறப்படுகிறது. பின்னர் தனது அறிவு வளர்ச்சியால் கெட்டவன் நல்லவன் என்று என்று பகுத்ததை "வல்லசுரர் தேவர்" என்ற அடிகள் கூறுகின்றன. இவ்வாறு சைவ சமயத்தில் கூர்ப்புக் கொள்கையை ஆதரிக்கும் வேறு பல விடயங்களும் காணப்படுகின்றன.

இந்து சமயத்தின் மற்றைய பிரிவான வைஷ்ணவத்தில்; அச் சமயக்கடவுள் எடுத்த அவதாரங்கள் கூர்ப்புக் கொள்கையினை விளக்குவதாக அமைந்துள்ளன. வைஷ்ணவக்கடவுளின் பத்து அவதாரங்களில் மீனுருவமாகிய மச்ச அவதாரம், ஆமை உருக்கொண்ட ஊர்ம அவதாரம், பாம்பு

உறுதியாய்த் தீர்மானித்தவனுக்கு எல்லாப் பிரச்சினைகளும் எளிதே.

உருக்கொண்ட காளிங்க நர்த்தன அவதாரம், பன்றி உருவாக வந்த வராக அவதாரம், யானை, கரடி போன்ற பெரிய மிருக உருக்கொண்ட வாமன அவதாரம், மனித முகம் கொண்ட சிங்கமாகிய நரசிம்ம அவதாரம் என்பன உயிரினங்கள் படிப்படியாக மாற்றமடைந்து பரிணாம வளர்ச்சி எய்திய ஒழுங்கில் அமைந்துள்ளன. பின்னர் தொடர்ந்து கூர்ப்பால் மனிதன் தோன்றியபின் அவனது நாகரிக வளர்ச்சியை விளக்குவதாக விஷ்ணுவின் மற்றைய அவதாரங்கள் காணப்படுகின்றன. மனிதன் நாகரிகமடைந்து முதன்முதலாக விவசாயம் செய்தான். விஷ்ணுவின் பரசுராம அவதாரத்தில் அவர் ஏர், கலப்பையுடன் காணப்படுகிறார். அடுத்த அவதாரமாகிய கிருஸ்ண அவதாரத்தில் அவர் ஆடு, மாடுகளை மேய்க்கும் இடைய னாகவும், அடுத்த அவதாரத்தில் நாகரிகமடைந்த மனிதனாக மனிதர் களைக் கட்டுப்படுத்தி ஆட்சி செய்கின்ற மன்னனாகவும் வருகிறார். பின்னர் எல்லோரையும் போல் பொது வாழ்வில் ஈடுபட்டு மக்களை நெறிப் படுத்தும் கல்கி அவதாரமாக வரவிருக்கிறார். இது மனிதனின் நாகரிக வளர்ச்சியின் ஒழுங்கைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு உயிர்கள் தொடராக வந்த வளர்ச்சியின் போக்கையும் மனிதனது நாகரிக வளர்ச்சியின் போக்கையும் விளக்குவதாக விஷ்ணுவின் தசாவதாரம் காணப்படுகின்றது.

இன்று பரிணாம வளர்ச்சி தடைப்பட்டுவிட்டதெனக் கூறலாம். "முனிவராய் தேவராய்" என்று மாணிக்கவாசகர் கூறியது போல் தெய்வீகச் சிந்தனையுடன் முனிவர் களாகவும் தேவர்களாகவும் மாறுவோர் அருகிவிட்டனர். மனிதன் இயற்கை யோடு சேர்ந்து வாழாமல் இயற்கையைக் கட்டுப்படுத்துகிறான். இயற்கையின் மாற்றங்கள் பாதிக்காத வாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றான். இதனால் சூழல் மனிதனில் தாக்கத்தை ஏற்படுத்து வதில்லை. ஆகவே தற்போது பரிணாம வளர்ச்சி மிக மந்தமாகவே நடைபெறுவதாக கருதப்படுகிறது.

**நான்கு வேதங்கள்**

ஏழைகள் வீட்டிற்கு ஒரே வாசல். வசதி படைத்த வர்கள் வீட்டிற்கு நான்கு பக்கமும் வாசல்கள். மற்ற மதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வேதந்தான். இந்து மதத்திற்கு நான்கு வேதங்கள்.

உ

# அருணகிரிநாதரின் பக்திப்பார்வையில் ஆறுமுகன்

திரு. ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள்



குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பது முதியோர் வாக்கு. முருகப்பெருமான் பக்திப்பரவசத்தில் வசப்படும் அருள் மூர்த்தியாவர். வழிபடும் அடியார்களின் பக்தி வசப்பட்டு வேண்டியவாறு அருளும் கிருபாநிதி. அருணகிரிநாதர் வேண்டியழைக்க மயில் மீதமர்ந்து காட்சியீந்தவர். முருகபக்தனாம் நக்கீரர் பாட வேலெறிந்து குகையைப் பிளந்து அவருடன் ஆயிரவரையும் காப்பாற்றியவர்.

சிவபெருமானது நெற்றிக்கண்களினின்றும் தோற்றிய ஆறு அக்கினிப் பொறிகளும் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாகின. கார்த்திகைப் பெண்கள் பாலூட்டினர். பரமேஸ்வரனுடன் வந்த பார்வதி அம்மையார் வாஞ்சையோடு ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச்சேர்த்து அணைத்தார். அவ்வேளையில் அவ் ஆறு குழந்தைகளும் ஒன்றாக இணையவே ஆறுதிரு முகங்களும் பன்னிரு கரங்களும் இரு பாதங்களுமுடைய கந்தசுவாமியானார். அம்மை, அப்பர் நடுவில் அமர்ந்தார் முருகப்பெருமான்.

அப்பெருமானது அருட் தோற்றத்தைப் பார்த்த சிவபெருமான் புரா சக்தியை நோக்கி

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்.

சக்தியே! முருகன் வேறு நாம் வேறல்லேம். யாண்டும் எம்மைப் போலவே நீக்கமற நிறைந்தவன். பார்வைக்கு குழந்தைபோலத் தோற்றுகிறான். ஆயின் முற்றும் உணர்ந்தவன். தன்னை வணங்கியவர்களுக்குச் செல்வமும் ஞானமும் முத்திப்பேறும் அளிக்கவல்லவன் என்று அருளினார்.

கருணையுள்ள இடமே கடவுளின் சாந்தம் உள்ள இடம்.

அப்பெருமானது அருட்தோற்றத்தைப் பார்த்த பற்பலரும் தத்தம் இயல்புக் கேற்பப் பலவாறு போற்றிப்புகழ்ந்துள்ளனர். அவர்களில் வீரவாகு தேவர்

"மண் அளந்திடும் மாயெனும் வனச மேலவனும்
எண்ணரும் பகல் தேடியும் காண்கிலா திருந்த
பண்ணவன் நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
உண்ணிறைந்த பேரருளினால் மதலையாய் உதித்தான்"

என்று உளங்கொள வைக்கிறார். பூமியை அளந்த மாயெனும் தாமரை ஆசனனாகிய பிரமனும் எண்ணில்லாத காலம் தேடியும் அடியையும் முடியையும் காணமுடியாத பரம்பொருளின் நெற்றிக்கண்ணிலிருந்து முழுமுதற் பொருளே பேரருளுடன் மதலையாக வந்துதித்தான் என்பது அவர் வாக்கு.

பகைவனாகிய தாரகாசுரன் தன் முதற்பார்வையிலே "கற்பனை கடந்த ஆதிக் கடவுளே இவன் கொல்" என்று வியக்கிறான் சிங்கமுகாசுரனோ, "தன்னிகர் இல்லாப் பரம்பொருள் தனிஉருக் கொண்டது" என்றும் "ஞானந்தான் உருவாகிய நாதன்தான்" என்றும் போற்றுகிறான்.

யுத்த களத்திலே முருகன் அருளினாலே சிறிது மெய்யுணர்வு பெற்ற சூரபதுமன்

"மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ"

என்று கூறுகிறான்.

இவையாவற்றிற்கும் மேலாகக் கச்சியப்ப சிவாச்சாரியார்

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"

என்று போற்றிப் புகழ்ந்துள்ளார். இவ்வாறு இன்னும் பலர் தத்தம் உள்ளுணர்வுக்கு ஏற்ப முருகப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

அருணகிரிநாதர் முருகனால் ஆட்கொள்ளப்பெற்ற சிறந்த பக்தர். அவர் முருகப் பெருமானது ஆறு திருமுகங்களையும் தரிசித்தபோது ஆறு முகங்களிலும் முருகப்பெருமானுடைய அருள் ஆடல்களை உணர்ந்து களித்தார். கண்டவாற்றைத் திருப்புகழாக ஓதினார்.

அருணகிரியார் வாழ்ந்த காலத்தில் சம்பத்தாண்டான் என்னும் மந்திரவாதி ஒருவன் வாழ்ந்தான். அவன் பார்வதி தேவியைப் பூசிப்பவன். மந்திர செபத்தினாலே அவரை மகிழ்வித்து வேண்டியநேரம் அழைத்து இஷ்ட சித்திகளைப் பெற்று வந்தவன். விருது, கொடி, குடையுடன் எக்காளம் ஒலிக்க உலாவுபவன்.

ஓய்வுள்ள மனிதர்களே இன்பமான மனிதர்கள்.

வறுமையில் வாழ்ந்த அருணகிரியார் தமக்கையாரின் ஆதரவால் வாழ்ந்து வந்தார். வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியால் அருணாசலத்து வடக்குவாயிற் கோபுரத்தில் ஏறி முருகனை நினைத்த வாறே உயிர்விடக் கீழே குதித்தார். அவர் முன்பு செய்த புண்ணியப்பேறு காரணமாக முருகப்பெருமான் அவரைக் காப்பாற்றித் திருவடி தீட்சை செய்து "முத்தைத்தரு பத்தித்திருநகை" என அடி எடுத்துக் கொடுத்துப் பாடும்படி பணித்தார். அருணகிரிநாதர் முருக பக்தனாகித் திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவற்றைப் பாடினார்.

ஒருநாள் அருணகிரிநாதர் அருணகிரிக் கோபுர வாயிலிற் படுத்திருந்தார். அத்தருணம் விருது கொடி குடையுடன் வந்த சம்பத் தாண்டானுக்கும் அவருக்குமிடையிலே வாக்கு வாதம் ஏற்பட்டது. சம்பத்தாண்டான் தனது திறமையைக் காட்டுதற் பொருட்டாகப் பார்வதி தேவியாரை அழைப்பதாகக் கூறினான். அருணகிரியார் முருகனை அழைத்துக் காட்டுவதாகக் கூறினார்.

அன்றிரவு சம்பத்தாண்டான் பார்வதியாரை அழைத்து மறுநாள் சபையிலே கூப்பிட்டழைக்கும்போது காட்சி தந்து அருள வேண்டுமென்று வேண்டினான். தாயாரோ "இன்றுடன் உனக்கு வாக்குத்தந்த 12 வருடங்களும் முடிந்து விட்டன. இனி நாம் உனக்கு உதவ வரமுடியாது" என்று மறுத்தார். அப்பொழுது சம்பத்தாண்டான், நீங்கள் வராவிடின் முருகனையாவது அங்கு வராமல் தடுத்து வைத்து அருள வேண்டும்" என்று வேண்டினான். தாயார் இரங்கி அவ்வாறு செய்வதாக அருளினார். மறுநாள் கோபுரவாயிலிற் பெருஞ்சபை கூடியது. சம்பத்தாண்டான் தான் சபதஞ் செய்தவாறு தாயாரை அழைப்பது போலக் காட்டி, முடியாமையினாலே அருணகிரியாரைப் பார்த்து, முருகனை நீயழை பார்ப்போம்" என்றான். அருணகிரியார் பக்தி மூலமாக முருகனை அழைக்கலானார்.

அவ்வேளை தாயார் முருகனைத் தனது மடியின் மீது இருத்திப் பரவசப் படுத்திக்கொண்டே இருந்தார். அருணகிரியாரோ வேல் விருத்தம் பாடி, மயில் விருத்தம் பாடலானார். உடனே மயிலானது தோகையை விரித்துக் கொண்டே முருகப்பெருமானது மருங்கில் வந்து நின்று ஆடியது. உடனே முருகன் தாயார் மடியிலிருந்து நழுவி மயிலில் ஏறிச் சபையின் முன் வந்து காட்சி கொடுத்தார். அறுமுகப் பெருமானின் தரிசனத்தில் ஆறு திரு முகங்களையும் பார்த்தபோது இவ்வாடலே முதற்கண் அவர் மனத்திரைக் கண் தோன்றலாயிற்று. உடனே "ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே" என்று திருப்புகழ் பாடத் தொடங்கினார்.

அடுத்ததாக அவர் மனத் திரையில் உணர்ந்த காட்சி இதுதான். கைலாய கிரியில் சிவபெருமான்

தவறு செய்து திருந்துபவன் தன்னைக் கடவுளிடமே ஒப்படைத்து விடுகிறான்.

பார்வதிதேவியாருடன் வீற்றிருந்து தேவர்களுக்கு அருள் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பிரமதேவன் வந்து வணங்கி மீளும் பொழுது, கோபுர வாயிலில் இருந்த முருகப்பெருமானைக் கண்டும் சிறுவன் தானே என்று அகந்தையால் காணாத போற் சென்றான். முருகப் பெருமான் அவனை அழைத்து, நீயார்? என்ன தொழில் செய்கிறாய் என வினவ, நான் பிரமன், படைத்தற்றொழிலைச் செய்கிறேன் என்றான். "அங்ஙன மாயின் உனக்கு வேதங்கள் தெரியுமே. ஒன்றைக்கூறு பார்ப்போம்" என முருகன் வினாவப், பிரமன் ஓம் என்று தொடங்கி ஓதத் தொடங்கலும் முருகப்பெருமான் அவனைத் தடுத்து நிறுத்தி "நீ கூறிய ஓம் என்னும் பிரணவத்தின் பொருளைக் கூறுவாயாக" என்று பணித்தார். பிரமதேவன் அப்பிரணவத்தின் பொருள் தெரியாது விழிக்கவே, "பிரணவத்தின் பொருள் தெரியாத உனக்கு என்ன படைப்பு" என்று கூறி அவனைக் குட்டிச் சிறையிலடைத்துவிட்டுத் தானே படைத்தற்றொழிலைச் செய்யத் தொடங்கினார்.

இதனால் தேவர்கள் வருந்திச் சிவபெருமானிடம் சென்று முறை யிட்டுப் பிரமனைச் சிறையினின்றும் விடுவிக்கும் படி வேண்டினர். சிவபெரு மான் பிரமனைச் சிறையிலிருந்து விடுவித்தபின், முருகப்பெருமானைப் பார்த்துப் பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தாற் கூறு பார்ப்போம் என்றார். முருகப் பெருமானோ, முறைப் படி குருசீட முறையிலே கேட்டாற் கூறுவதாகக் கூறலும் ஆடலை விரும் பிய அப்பனும் முறைப்படி சீடனாகவே, முருகப் பெருமான் குருவாக இருந்து பிரணவப் பொருளை உபதேசித்தார். இத்திருவிளையாடலை உணர்ந்த அருணகிரியார் "ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே" என இசைத்தார்.

(தொடரும்...

## தாழம்பூவும் மணமும்

உன்னிடத்தில் எத்தனை தீமைகள் இருந்தாலும் உலகம் அதை லட்சியம் செய்யாது. கொடுக்கின்ற தர்ம குணமாகிய வாசனை ஒன்று மட்டும் இருக்குமானால், உலகம் உன்னைப் பாராட்டும், உன்னை மதிக்கும். தாழம்பூ, பாம்புகளால் சூழப்பட்டு இருக்கின்றது. அதனிடம் பழங்கள் இல்லை. முள்ளுடன் கூடி இருக்கின்றது. சேற்றில் நிற்கின்றது. எளிதாக அடையமுடியாக இடத்தில் இருக்கின்றது. இத்தனை குற்றங்கள் இருந்தாலும், வாசனை என்ற ஒன்று இருப்பதால் மக்கள் மதித்து அதை எடுத்துத் தலையில் சூடிக்கொள்கிறார்கள். வாசனை என்ற ஒரு நல்ல குணத்தால், மற்ற தீமைகள் மறைந்து விடுகின்றன. ஆகவே, தர்மம் செய்.

தயக்கமுடையவன் தவறி விடுவான்.

# புகழ்ச்சோழ நாயனார்

திரு. க. சிவசங்கரநாதன். J.P.அவர்கள்

செருவில்லி புத்தூர் என்னும் ஊரில் சிவபெருமான் திருக்கோயிலில் முப்பொழுதும் திருமேனி தீண்டிப் பூசனையும் விழாவும்செய்து வரும் நற்குடி அது. அந்தச் சிவமறையோர் திருக்குலத்தில் உதித்தார் புகழ்த் துணையாரென்னும் பண்பாளர். தம்முடைய கடமையிலே சிறிதும் தவறாமல் நாள்தோறும் மனம் உருகி இறைவனைப் பூசித்து வந்தார். அவனுக்கு மனத்தால் அன்புசெய்து வாயால் அருச்சனைகள் சொல்லி உடம்பால் வழிபடுவதைக்காட்டிலும் சிறந்த தவம் வேறுயாதும் இல்லை. என்ற துணிவோடு அவர் தம் கடமையைச் செய்து வந்தார்.

ஒரு சமயம் நாடுமுழுவதும் பஞ்சம் வந்துவிட்டது. மழை பல ஆண்டுகளாகப் பெய்யாமையால் நீர்நிலைகள் வரண்டன. வயல்கள் கட்டாந்தரையாகின. புல்பூண்டுகளும் முளைக்காத கட்டாந்தரையாக மாறியது எங்கும். ஆடுகள் மடிந்தன. மாடுகள் மறைந்தன. மக்கள் ஊர்விட்டு ஊர் ஓடினர். குழந்தையை விட்டு ஓடியவர்களும் தந்தைதாயை விட்டு ஓடியவர்களும், தாரத்தை விட்டு ஓடியவர்களுமாக மக்கள் விலங்கினும் கொடிய இயல்பை மேற்கொண்டார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போகுமென்று தெரியாமலா பாட்டி சொன்னாள்.

செருவில்லி புத்தூரிலும் பஞ்சப் பேயின் கோரதாண்டவம் பல இன்னல்களை விளைவித்து ஊர் பாழாகிவிட்டது. கோயிலுக்கு வந்து தரிசனம்செய்ய மக்கள் இல்லை. அவர்கள் சோறு கிடைக்கும் இடம் எங்கே என்று தேடி ஓடினார்கள்.

இந்த நிலையில் புகழ்த் துணையார் மாத்திரம் ஊரைவிட்டு ஓடவில்லை. அவருடைய உறவினர்கள் கூட அவரை விட்டுவிட்டுப் போய் விட்டனர். அவர் தம் இல்லத்தை விட்டுப்போக வேண்டுமே என்று அஞ்சவில்லை. போகிற இடம் தெரியாமல் வருந்தவில்லை. தாம் வழிபடும் சிவபெருமானை விட்டுப் போக அவர் மனம் இடங்கொடுக்க வில்லை. எத்தனை துன்பம் வந்தாலும் சரி இந்த உடம்பில் உயிர் இருக்கும்வரை எங்கேயிருந்தேனும் பூவும் நீரும் கொணர்ந்து எம் பெருமானை வழிபடுவேன் எம் கோமானை விடமாட்டேன் என்ற உறுதிப்பாட்டோடு இருந்தார்.

ஒருநாள் குடத்தில் நீர் கொணர்ந்தார். அவர் உண்டு பல நாட்கள் ஆகின. அந்தக் குடத்தைக் கோயிலுக்குள் கொண்டு வருவதற்குள் பல இடங்களில் உட்கார்ந்து உட்கார்ந்து வந்தார். மெல்லச் சிவலிங்கப் பெருமானை அணுகிநின்று கையை மேலே உயர்த்திக்

சிந்தனை கட்டுப்பாடற்றது.

குடத்திலுள்ள புனலால் திருமஞ்சனம் செய்தார். கையைத் தூக்க முடியாமல் தூக்கிச் செய்தார் அவரால் தூக்க முடியவில்லை. அப்படியே லொட்டென்று குடத்தைச் சிவலிங்கத்தின் தலையில் விழும்படி விட்டுத் தளர்ந்து கீழே விழுந்து மூர்ச்சையானார். அப்போது அவருடைய மயக்கத்தைத் தெளிவிக்க அங்கே யார் இருந்தார்கள்?. யாராவது அவர் விழுந்து விட்டார் என்று கேட்டால் பைத்தியக்காரப் பிராமணர் ஊரார் செய்ததுபோல் எங்காவது ஓடாமல் இந்தக் கல்லைக் கட்டிக்கொண்டு அழுகிறாரே என்றுதான் சொல்லி இருப்பார்கள்.

ஆனால் அப்போது அந்தப் பேரன்பரைத் தெளிவிக்கச் சிவபிரான் திருவருள் முன்வந்து கீழே மயங்கிக் கிடந்த அவர் கனவில் சிவபெருமான் எழுந்தருளினார். "அன்பா, உன் தவத்தை மெச்சினோம். உயிரை இழப்பதானாலும் நம்மைப் பிரியாமல் இருக்கும் உறுதியைக்கண்டு மகிழ்ந்தோம். இனி நீ கவலையுற வேண்டாம். ஒவ்வொரு நாளும் காலையில் இங்கே பீடத்தின் கீழே ஒரு பொற்காசு இருக்கும் அதை எடுத்துச் செலவுசெய்து உன் உடம்பைப் பேணி நமக்கு வழிபாடு செய்து வருவாயாக என்று திருவாய் மலர்ந்து மறைந்தார்.

சோர்வு நீங்கிய அன்பர் எழுந்தார். கண்ணைத் துடைத்துக் கொண்டார். என்ன காரியம் செய்தோம். எம்பெருமான் திருமுடியின் மேலே குடத்தைப் போட்டு விட்டோமே என்று வருந்தினார். பிறகு தாம் கண்ட கனவை நினைந்தார். இறைவனது பீடத்தின் அடியிலே பார்த்தார். கனவிலே இறைவன் சொன்னது உண்மை ஆயிற்று. அங்கே பளபளவென்று ஒரு பொற்காசு கிடந்தது. அதைக்கண்டு அவர் உள்ளம் பாகாய் உருகியது. எம்பெருமான் என்னளவில் பஞ்சத்தைப் போக்கிவிட்டான். ஓடாமல் உழைக்காமல் ஊதியம் கொடுத்து விட்டான். தன்பூசனையைப் புரிவதனால் கைமேற்பலன் உண்டு என்று காட்டிவிட்டான் என்று ஆனந்தக் கூத்தாடினார்.

அந்தக் காசைக்கொண்டு உணவுப் பொருட்களையும் பூசைக்கு வேண்டிய அரும்பொருட்களையும் வாங்கினார். அவர் மீண்டும் உடல் வலிமை பெற்றார். முன் இருந்ததை விட பன்மடங்கு உள்ளத்தின் வலிமையையும் அடைந்தார். என் பசியைப் போக்கவேண்டும் என்ற கவலை என் ஐயனுக்கு இருக்கிற போது எனக்கு என்ன குறை என்று பெருமிதம் கொண்டார். தம்முடைய தொண்டிலே சிறிதும் குறைவின்றிப் பின்னும் சிறப்பாகப் பூசனை செய்து வழிபட்டு வந்தார். இன்றைய இக்கால கட்டத்தில் மேற்படி நாயனாரை யாம் நினைத்து அவர் வரலாற்றை எண்ணி இறைவனை வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக.

உ

# பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாணம்

திருமதி. சிவனேஸ்வரி. பாலகிருஸ்ணன் அவர்கள்

## "கௌரி கல்யாண வைபோகமே"

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தை ஒட்டிய பௌர்ணமி நாள் அமையும் பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் அநேகமான சிவன், முருகன் கோயில்களில் திருக்கல்யாண உற்சவம் நிகழும் இது பங்குனி உத்தரத்திருவிழா என்று பெயர். தைப்பூசம், பங்குனி உத்தர நாட்களில் முருகன் ஆலயங்களுக்கு, விசேடமாக பழனியில் ஆயிரக் கணக்கான காவடிகள் வரும். அவர்கள் முருகனை நினைந்து ஆடிப்பாடுவது நமது உள்ளத்தை உருக்கும். பங்குனி உத்தர நாளில் ஆயிரக்கணக்கான காவடிகளுடன் மக்கள் திரள் திரளாக வந்து தரிசிப்பர். இந்தச் சிறப்பான புண்ணிய நாளில் பார்வதி பரமேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெற்றது. அதனை நாமும் அறிந்து ஆனந்தத்தில் திளைப்போமாக.

ஒரு சமயம் திருக்கைலை மலையில் சிவபெருமானை நோக்கி, அவர் பத்தினியான தாக்ஷாயணிதேவி, ''தேவரே! தங்கள் சொல்லைக் கேட்காமல் தந்தையின் யாகத்திற்குச் சென்று அதனால் தாங்கமுடியாத அவமதிப்பைப் பெற்றேன். எல்லோரும் என்னை விலக்கப்பட வேண்டியவள் என்ற அர்த்தத்தில் தாக்ஷாயணி என்று என் பெயரைக் குறிப்பிடுகிறார்கள். மூவுலகங்களுக்கும் அதிபதியான பரம் பொருளே! பழிக்கு இடமான இந்தப் பிறவி வேண்டாம். வேறு இடத்தில் பிறவி எடுக்கும்படி வரம் தந்து அருளுங்கள்" என்று வேண்டினாள்.

சிவபெருமான் முகமலர்ந்து புன்முறுவல் பூத்துத் தம் பத்தினியை நோக்கி, ''தாக்ஷாயணிதேவியே! ஹிமவான் என்னும் பர்வதராஜனுக்கு நீ மகளாக மறுபிறவி எடுத்து அவனை மகிழ்விப்பாயாக. பர்வதராஜனும் உன்னையே மகளாக அடைய வேண்டிக் கடுந்தவம் இருக்கின்றான். அவன் மனைவியான மேனையும் உன் திருவடித் தாமரைகளிலே மனத்தை இருத்தித் தியானம் செய்கிறாள். ஆகவே அவர்களுக்கு மகளாகப் பிறந்து அவர்களை நற்கதியடையச் செய்" என விடைகொடுத்தனுப்பினார்.

பர்வதராஜன் நீண்டகாலம் தவம் செய்தபின் சிவசங்கரியான சக்திதேவி தோன்றினாள். மானஜ சரஸில் நீராட அரசன் சென்றபோது அத்தடாகத்தில் நீலோற்பவ மலரின் மீது மகாதேவி சின்னஞ்சிறு குழந்தையாக வடிவமெடுத்துப் படுத்திருந்தாள். பிறை சூடிய பெருமானின் தேவியைக் குழந்தை உருவில் கண்டதும்

பழிக்குப்பழி ஒருபோதும் காயத்தை ஆற்றாது.

அவனடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. பரம தரித்திரனுக்குப் புதையல் கிடைத்தது போல ஆனந்தப் பரவசமடைந்தான். அப்பெண் குழந்தை நான்கு திருக்கரங்களும், மூன்று கருவிழிகளோடும், முழுநிலவு போன்ற குளிச்சியான முகத்தோடும் கருகருவென்ற சுருண்ட கூந்தற் கற்றையோடும், பிறைநிலா சூடிய தலையோடும் நிர்மலமான புன்சிரிப்போடும் விளங்கினாள். அரசன் தேவியை வணங்கி தன்னிரு கைகளாலும் எடுத்துப் பெருமகிழ்ச்சியோடு இல்லம் சென்றான்.

கணவனை வாஞ்சையோடு வரவேற்ற மேனை குழந்தையைக் கும்பிட்டு ஆர்வத்தோடு வாங்கியதும் தாயன்பு மிகுதியால் தாய்ப்பால் சுரந்து மகேஸ்வரியான அன்னையும் தாய்ப்பால் அருந்தினாள். பிறவி என்பதே இல்லாத தேவி தங்களுக்குப் பெண்ணாகப் பிறவியெடுத்த அற்புதத்தை நினைந்து ஆனந்தத்தில் திளைத்தனர். தெய்வீகக் குழந்தையை வணங்கித் துதித்தனர். தேவி பெற்றோரை நோக்கிச், ''சிவத்துரோகியான தட்சனுக்கு மகளாகப் பிறந்த உடலை நீத்துவிட்டு உங்கள் தவத்திற்கு மனமுவந்து புதல்வியாக அவதரித்தேன்'' என்று கூறிய பின்பு மற்றைக்குழந்தைகளைப்போல் இரண்டு கைகளும், இரண்டு கண்களும் கொண்டு நீலோற்பவ மலரைப்போல ஒளி வீசுபவளாக உருமாறினாள். அருமை மகளுக்குப் "பார்வதி" என நாமகரணம் சூட்டினர். குழந்தை வளர்பிறைபோல் வெகு அழகாகவும் பரிபூரணமாகவும் வளர்ந்தாள்.

ஐந்து வயதானதும் பார்வதி தவம் செய்ய விரும்பினாள். அரசன் வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து தோழிமாரோடு அனுப்பி வைத்தான். இமயமலையின் உச்சியையடைந்து பார்வதி உற்சாகமாகத் தவம் புரியலானாள்.

கைலாச மலையின் உச்சியிலே சக்திநாதன் சனகாதி முனிவர்களுக்குச் சின்முத்திரை மூலம் உபதேசித்தபடி மௌனமாக அமர்ந்திருந்தார். மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிய வரும் எண்ணிய வரத்தைத் தருபவருமான மாகாப்பிரபுவை பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் சிரம்தாழ்த்தித் துதித்தனர். சூரபதுமன் முதலிய கொடிய அசுரர்களால் துன்பமடைந்து எம்பெருமானைத் தஞ்சமடைந்தனர். எம்பெருமானைப் பணிந்து தங்கள் பயத்தைப் போக்கவல்ல முருகப்பெருமான் எப்போது தோன்றுவார் எனக் கேட்டனர். ஈசன் புன்முறுவலோடு, "உங்கள் கோரிக்கை விரைவில் நிறைவேறும்" என்று கூறி அனுப்பினார்.

பார்வதியின் தவத்தினால் கவர்ந்திழுக்கப்பட்ட சிவபெருமான், அவளைச் சோதிக்க எண்ணி குடுகுடு கிழவராக மாறினார். பர்ணசாலைக்குள்

நுழைந்த கிழவரைத் தோழிகள் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர். பார்வதியும் பக்தியோடு வணங்கி உபசரித்தாள். பார்வதி தவம் செய்யும் காரணத்தைக் கேட்டார். தோழிகள் சகல உலகங் களுக்கும் நாயகரான, சர்வமங்கலங் களையும் அடியவர்களுக்கு வாரி வழங்கும் பரமசிவனையே கணவராக அடைய வேண்டித் தவம் புரிவதாகக் கூறினார்கள். வயோதிபர் சிவபெரு மானைப் பலவாறு குறைகள் கூறித் தன்னையே மணஞ்செய்யும் படி வேண்டினார். பார்வதிதேவி கோபாவேஷமாக கிழவரைப் பேசி விட்டுப் பர்ணசாலையை விட்டு வெளி யேற முனைந்தார்.

அப்போது கிழ அந்தணராக வந்த பரமசிவன் புன்சிரிப்போடு காட்சியளித்தார். பார்வதிதேவி அளவுகடந்த மகிழ்ச்சிப் பெருக்கால் அவருடைய திருவடித் தாமரைகளை நமஸ்கரித்தாள். "திரிலோகங்களிலும் பிரசித்தி பெற்றிருக்கும் தாங்கள் என்னைத் தங்கள் பக்தர்களில் ஒருவராக அங்கீகரித்து ஆட்கொள்ள வேண்டும்" என வேண்டி நின்றாள்.

பெருமான் பெரிதும் மகிழ்ந்து, "பார்வதியே! நாளையதினம் நடை பெறும் மாபெரும் திருமண விழாவில் உன் பெற்றோர்களின் சம்மதத்துடன் தேவர்கள், சித்தர்கள் முன்னிலையில் உன்னைப் பாணிக்கிரஹணம் செய்து கொள்கிறேன்!" என்று வரமளித்து விட்டுத் திருக்கைலைமலை சென்றார்.

சிவபெருமான் கட்டளைப்படி ஸப்தமகரிஷிகள் பர்வதராஜனிடம் வந்து உமது அருமை மகளுக்கு திருமணம் நடைபெறப்போகிறது என்றனர். பார்வதியும் நாணப் பொலிவோடு வந்ததும், அரசன் தன் மடியிலிருத்தி என் உயிராக, என் கண்ணாக, என் குலப்பூஷணமாக விளங்கும் பெண் இவளே எனப் பாசப்பெருக்கோடு கூறினான். அங்கிரச முனிவர், "மகேஸ்வரனுக்கு உலக நன்மையின் பொருட்டு உம் மனைவி யோடு சேர்ந்து உம் மகளைக் கொடுக்கவேண்டும். ஈஸ்வரனுக்கு இவளிடம் ஒரு மகன் பிறப்பான். இந்த உலகிலேயே அதிஅற்புத அழகு வாய்ந்தவனாகவும், மாபெரும் தோள்கள் உள்ளவனாகவும் அந்தப் பிள்ளை தோன்றிச் சூரன் முதலானவர் களை அழித்து வெற்றிவாகை சூடப்போகிறான்! ஜகத்திற்கெல்லாம் குருவாக விளங்கும் ஸ்ரீ சம்புவே உமக்கு மாப்பிள்ளையாக வரப் போவதால் நீரே பூஜிக்கத்தக்கவர்" என்றார்.

அப்போது அரசன் ஏழு முனிவர்களையும் நமஸ்கரித்து விவாக முகூர்த்தத்தை நிச்சயிக்க வேண்டினார். முனிவர்கள், "நாளைய தினமே உத்தர நட்சத்திரத்தில்- சுபமான முகூர்த்த வேளை இருக்கிறது. நாளைய தினம் பரமேஸ்வரனுக்கும் பார்வதிக் கும் திருமணம் நடைபெறட்டும்" என்று கூறி மகேஸ்வரனுடைய இருப்பிடம் சென்றனர்.

தேவைகள் இல்லாதவனே பெரிய பணக்காரன்.

திருமண விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் முறைப்படி வெகு கோலாகலமாக இருபகுதியினரும் செய்து முடித்தனர். சந்திர மௌலியான பெருமான் ஆடை ஆபரண அலங்காரங்களால் ஜொலித்துத் தேவர்கள், முனிவர்கள் புடைசூழச் சிவ வள்ளலான சுந்தரர், உலகையெல்லாம் மோகிக்கச் செய்யும் அழகோடு மாப்பிள்ளை ஊர்வலமாக வந்தார்.

பர்வதராஜனும் உறவினர்கள் தோழர்களோடு மாப்பிள்ளையை வரவேற்பதற்காகச் சென்றான். இருவரின் பரிவாரப் படைகளும் இரு பெருங்கடல்கள் ஒன்றோடொன்று கலப்பது போல் கலந்தன. மாப்பிள்ளை வடிவில் ஊர்வலம் வரும் மகேஸ்வரனைக் கண்டோர் கண் இமைகளைக் கொட்டவும் மறந்து அவரது திருவுருவ அழகையே பார்த்து மகிழ்ந்தார்கள்.

ரிஷப வாகனத்திலிருந்து ஜகத்பதி வேகமாக இறங்கித் தேவேந்திரனால் கொண்டுவரப்பட்ட பாதுகைகளின் மீது ஏறிப் பிரம்மா, விஷ்ணு ஆகியோர் கைத்தாங்கலாக அழைத்துவரப் பர்வதராஜனின் அரண் மனைக்குள் வந்தார். அரசன் மனைவியான மேனை மருமகனின் பாதகமலங்களை ஜலத்தினாலும் பசும்பாலினாலும் கழுவினாள். பெண்கள் அஷ்ட மங்களங்களையும் குறித்து இன்னிசை பாடினார்கள். பின்பு இரத்தினக்கற்களால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தின் மீது பரமேஸ்வரன் அமர்ந்தார். சித்தர்கள், யோகிகள், ஞானியர், தேவர்கள் இன்னும் பலர் அவரைச் சுற்றி அமர்ந்தனர்.

பர்வதராஜன் சுமங்கலிப் பெண்களைக் கொண்டு பார்வதியை அதி அற்புதமாக அலங்கரித்து, வாசனைத் தைலங்களைக் கொண்டு நீராட்டி மங்களகரமான ஓர் ஆசனத்தில் உட்காரவைத்துக், "கௌரி கல்யாண வைபோகம்" என்று பாட்டுப்பாடி அளவுகடந்த ஆனந்த வெள்ளத்தில் திளைத் தார்கள். பார்வதிதேவியை அலங்கரித்து மணமகனின் அருகில் உட்காரவைத்தார்கள். தேவர்களுக் கும் தேவனான பரமேஸ்வரன் திவ்விய சிங்காசனத்திற் புதுமணப் பெண்ணுடன் அமர்ந்த காட்சி அதி அற்புதம்.

மகாவிஷ்ணுவும் மற்றும் தேவர்களின் விருப்பப்படியும் பொன்னூஞ்சலில் மணமக்களை வைத்து ஊஞ்சலாட்டினர். தும்புரு, நாரதர் மகிழ்ச்சிப்பெருக்கில் இன்னிசை பாடினார்கள். பின்பு மங்கள தீபங்களாற் பூஜித்து வணங்கினார்கள். பார்வதியும், பரமேஸ்வரனும் பொன்னூஞ்சலிலிருந்து ஜோடியாக இறங்கிக் கல்யாண மண்டபத்தின் உள்ளே சென்றார்கள். பர்வதராஜன் மனைவியோடும் மற்றும் புத்திரர் களோடும் பரமசிவனின் திருவடி களைப் பயபக்தியோடு அலம்பி,

மௌனத்தைவிடப் பேச்சிற்கு வருந்தியோர் அதிகம்.

அந்தத் தீர்த்தத்தை அருந்திச் சிரசிலும் தெளித்துக் கொண்டான். ஈசனுக்கு பக்தி சிரத்தையோடு மதுவர்க்கம் அளித்துக் கோடி வஸ்த்திரத்தை வழங்கினார்கள். மணப்பெண்ணுக்கு கல்யாணப் புடைவையை உடுத்தி மங்கள ஆபரணங்களை அணிவித்தனர்.

இந்த ஏற்பாடுகளானதும் அரசன் பொன்மயமான கிண்டியில் நீரை நிரப்பிப், பரமசிவனை வணங்கித் தன் அருமைப்புதல்வியான பார்வதி தேவியை நீர் வார்த்து, மந்திரங்கள் ஓதிச், சாஸ்திர விதிப்படி கன்னிகாதானம் செய்து கொடுத்தான். "சர்வாபரண பூஷிதையும் சர்வ மங்களங்களினால் சோபிக்கின்றவளுமாகிய என் கன்னிகையைச் சர்வேஸ்வரனாகிய தங்களுக்கு கன்னிகாதானம் செய்கிறேன்! தேவேசனே! என் குமாரத்தியை தாங்கள் ஏற்கவேண்டும்" என வேண்டினான்.

அப்போது "ஜயவிஜயீபவ" என்ற மங்கள கோஷம் வானளாவ எழுந்து முழங்கியது. மகேஸ்வரனும் மிக மகிழ்ச்சியோடு தேவியின் கரம் பற்றினார். அசையும் பொருள் அசையாப் பொருள், சகல உலகங்களும் பெரிதும் உவகையடைந்தன. ஞானிகள் கணங்கள் அனைவரும் மணமக்களை பக்தி சிரத்தையோடு வணங்கினர்.

திருக்கல்யாண வைபவத்தை கண்டுகளிக்க சகல உலக மக்களும் வந்தபடியால் தென்திசை உயர்ந்தும் வடதிசை தாழ்ந்தும் போய்விட்டது. எல்லோரும் மகாதேவனிடம் தாங்கள் பூமியிலிருந்து விழுந்து விடுவோமோ என்று முறையிட்டனர். அவர்களது வேண்டுதலுக்கு இரங்கிய சிவனும் அகஸ்தியரை அழைத்துத் தெற்குத் திசையிற் சென்று தங்கும்படி கட்டளையிட்டார். அகஸ்தியரும் வந்து சேர்ந்ததும் பூமி சரிசமனாக மாறி விட்டது. அவருக்காக திருக்கல்யாணக் கோலத்தில்தென்திசையிலும் தரிசனம் அளித்தார்.

பின்பு நான்முகன் எல்லாச் சடங்குகளையும் அக்கினி சாட்சியாக நடாத்திவைத்தார். அம்மிமிதித்து, அக்கினி வலம்வந்து எல்லாச் சடங்குகளும் முடிவடைந்ததும் அனைவருக்கும் தரிசனமளித்து ஆசீர்வதித்து அனுக்கிரகம் செய்தார்கள். ரதிதேவிக்கும் கணவனை திரும்ப அடைய அனுக்கிரகித்தார். பின்பு புத்திளம் மனைவியோடு ரிஷப வாகனத்தில் ஏறியமர்ந்து கைலாசத்தை நோக்கிச் சென்றார்.

மகத்துவம் வாய்ந்த பார்வதி திருக்கல்யாணத்தைப் பக்தியோடு படிப்போர், கேட்போர் எல்லாம் தாங்கள் விரும்பிய இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவர்.

பணக்காரனாக அவசரப்படுபவன் கபடற்றவனாக இரான்.

# சமய வாழ்வுக்கு கல்வி அவசியம்

திரு. கனக. நாகேஸ்வரன். எம்.ஏ.அவர்கள்

எனவே பிள்ளைகள் உண்மையான சமூக நிலைகளிற் பணிபுரியவும், ஆக்கப் பணிகளில் ஈடுபடவும், சக்தியும் வல்லமையும் உடையவர்கள் என்னும் நம்பிக்கையை வளர்க்கும் இடமாகவும் பாடசாலைகள் அமைய வேண்டும்.

பாடசாலைகள் பிள்ளைகளுக்கு உண்மையான, பயன்படக் கூடிய பணிகளைக் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் வகுப்பறையில் உடற்பணிகளில் மட்டுமல்லாது உளப்பணிகளிலும் ஈடுபட்டுச் சுதந்திர நோக்குடன் சுய சிந்தனையை விருத்தியாக்க வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலையிற் சுதந்திரமான சூழலில் வளர வேண்டும். பிள்ளைகள் சிந்திக்கும் திறன் வாய்ந்தவர்கள். அவர்களின் சிந்திக்குந் திறனைத்தூண்டி விஞ்ஞான நோக்கை வளர்க்க வேண்டும். நுண்ணறிவுத்திறன் ஆக்கப்பணிகளிற் பயன்படுவதோடு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உபயோகிக்கப்பட வேண்டும். கல்வியின் சிறப்பு அதனைப் பெறுகின்ற வழிவகைகளில் தங்கியுள்ளது. பிள்ளைகள் பொருளறிவினைப் பெற்றால் மட்டும் போதாது. அறிவு அனுபவ மதிப்புடையது. கல்வி அனுபவம், சமூக அனுபவம் இரண்டும் சேர்ந்த சமூக அறிவைப் பெறுவதே உண்மை அறிவாகும். பிள்ளைகள் 'நாம் கற்கிறோம்' என்று கூறுவதைக் காட்டிலும் 'நாம் அனுபவங்களைப் பெறுகின்றோம்' என்று கூறுவதுதான் சிறந்த கல்வியாகும். எனவே கல்வி என்பது அனுபவங்களை- அனுபவங்களால்- அனுபவங்களூடாக அளிப்பதாக அமைய வேண்டும்.

கல்வியென்பது காலத்திற்கேற்ப சமூகப் புனரமைப்புக் கருவியாக இருக்க வேண்டும். சமூகத்தின் குறைபாடுகளைக் கல்வி மூலமே போக்குதல் வேண்டும்.

கல்வியென்பது முன்னேற்றத்தை நோக்கி வளர்ச்சி பெறுவதாக அறிவியல் துறைகளையும் முறைகளையும் மென்மேலும் பயன்படுத்துவதாக அமைய வேண்டும்.

கல்வியின் பிறிதொரு பெரிய பயன்பாடு மனிதனைப் பண்பாடுடையவனாக்குவதாகும். அரம் போன்ற கூர்மையான அறிவு படைத்தவராக இருப்பினும் மக்கட்பண்பில்லாதவராக வாழ்வாரெனின் அவர் மரத்துக்குச் சமமானவர். மனித வடிவில் வாழ்ந்தாலும் பண்பில்லாதவன் மரத்துக்கு ஒப்பாவன்.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்"

என்பது திருக்குறள்.

பண்பாடு உள்ளடங்கும் அம்சங்கள் பல. மனிதன் வாழுகின்ற சமுதாயச் சூழல், பேசும் மொழி அல்லது மொழிகள், பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள், விழுமியங்கள் என்பனவற்றை எல்லாம் பண்பாடு உள்ளடக்குகின்றது. மனிதனுடைய ஆற்றல்கள் செயற்றிறன்கள் மனப்பாங்குகள் என்பனவும் பண்பாட்டின் அம்சங்களாகவே கருதப்படும்.

சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து வருவதே பண்பாடு என்றும், ஒரு சமுதாயம் தன்னுடைய எதிர்காலச் சந்ததிக்கு விட்டுச் செல்வதே பண்பாடென்றும் கூறப்படுகிறது. உலகிலே சில நியமங்கள் உண்டு. இந்த நியமங்கள் சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடும். ஆயினும் சமுதாயம் எதிர்பார்க்கும் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டிருக்கும் நியமங்களைக் கல்வி வளர்த்துப் பண்பாடடைய வைக்க முயல்கின்றது. ஆகவே கல்வியும் பண்பாடும் ஒன்றோடொன்று இணைந்து கல்வியினூடாகப் பண்பாட்டையும் பண்பாட்டினூடாக அறிவையும் வளர்த்தல் வேண்டும்.

மனிதன் எப்படியும் வாழலாம் என்பது நியதியில்லை. இப்படித்தான் வாழ வேண்டுமென்பதே நியதியாகும். பாடசாலைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் மீறப்படுமானால் அது பண்பாட்டை மிகவும் பாதிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமே இல்லை.

பாடசாலைகளில் விழாக்கள் விளையாட்டுப் போட்டிகள் என்பன நடைபெறுகின்றன. குறிப்பாக, போட்டிகள் மூலம் கூட்டுறவு, ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, தோல்வியை ஒத்துக்கொள்ளும் பண்பு, தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் உளப்பாங்கு என்பவற்றை வளர்த்தல் வேண்டும். பாடசாலைகளில் பெறுகின்ற இப்பயிற்சிகள் தான் ஒருவனை அவன் வாழும் சமுதாயத்தில் சிறந்த குடிமகனாக வாழ வைக்குமென்பதை மனத்தாற் கொள்ளுதல் வேண்டும்.

கல்வியின் அடுத்த மிகமிகப் பிரதானமான அம்சம் சமயக்கல்வி ஆகும். மனிதனுடைய ஆளுமையை முழுமையாக்கும் மனிதத்தன்மை, வாய்மை, அறம், முருகியல் ஆகிய பலவும் வளர்ச்சியடைவதற்குச் "சமயக்கல்வி" அவசியமாகும். மகாத்மா காந்தியடிகள் கல்விக்கு விளக்கமளிக்கும்பொழுது

"மக்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக்கொணர்ந்து விளக்கஞ் செய்வது கல்வி" என்று கூறுகின்றார்.

உலகில் எல்லா நாடுகளிலும்

செலவழித்து நிம்மதியாயிரு ஆனால் வீணாக்காதே.

உள்ள கல்வி முறைகளிலே சமயக் கல்வி முறையே முக்கியமானதும் தொன்மையானதுமாகும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப் படையாக இருக்க வேண்டிய ஆன்மீக நெறிகளைக் கூறுவதே சமயக் கல்வியாகும். சமயம் பல வகையிலும் வாழ்க்கையை வளம் படுத்தியுள்ளதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. சமயம் மக்களின் வாழ்க்கை இலட்சியத்தை அறிவுறுத்துவதுடன் அன்பு, தியாகம், பண்பு, பணிவு, அடக்கம், மனிதத் தன்மை, தயை, தாட்சண்யம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

சமயங்கள் யாவற்றிலும் தியானம் முக்கிய இடம் பெறுகின்றது. அது சிதறும் சிந்தனைக் கதிர்களை ஒருங்கு குவிக்கும் குவிவில்லையாகும். "மன ஒருமையே கல்வியின் அடிப்படையான இலட்சியம் என்பது எனது முடிவு" எனச் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். சமயம் ஒரு கட்டாயப் பாடமாக பல நாடுகளிற் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் அவ்வாறில்லை. எனினும் சமயக் கல்விக்குப் பதிலாக ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுகிறது.

நேர்மை, அன்பு, எளிமை, அடக்கம், தயை, உறுதி ஆகியன நற்செய்கைகளின் அம்சங்களாகும். இவற்றை அடைதலே நல்லொழுக் கத்தின் குறிக்கோளாகும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என வள்ளுவப் பெருந்தகை ஒழுக்கத்தின் உயர்வைப் பற்றிக் கூறுகின்றார். நாம் எத்தனை செல்வம் படைத்தவராயினும், எத்தனை பட்டம் பெற்றவராயினும், பண்டிதராயினும் ஒழுக்கத்தில் நிலை தவறுவோமே ஆயின் சமூகத்தில் மதிப்பை இழந்து விடுவோம். எனவே மனிதனுக்கு முக்கியமாக, உயிரினும் மேலாக வேண்டப்படுவது நல்லொழுக்கமாகும். இதனையே சமயக்கல்வி வலியுறுத்து கின்றது.

ஞானமே இந்து தர்மக் கோட்பாடாகும். சமயமும் மெய்யறிவும் ஒன்றியுள்ளதை இந்து சமயம் வலியுறுத்துகின்றது. பகுத்தறிவு ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது பௌத்தக் கல்வி மரபு. அறியாமையிலிருந்து மக்களை விழித்தெழச் செய்து அவர்களைப் பரிநிர்வாண நிலைக்கு எடுத்துச் செல்ல உதவுவது கல்வி என்பது பௌத்தக் கொள்கையாகும். மன இருளை நீக்கி அறிவாகிய ஒளி பரப்பும் கல்வி எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும்.

ஏழாம் நூற்றாண்டளவில் உதித்த இஸ்லாமியக் கல்வி

சரிதான் என்பதை உறுதிப்படுத்திக்கொள் பிறகு முன்னேறு.

மரபிற்கு மதமே அடிப்படையாகும். இஸ்லாமிய மறையாகிய "குர் ஆன்" கூற்றின்படி ஞானம் முடிவற்றது. இம்மார்க்கத்தில் ஒருவன் அறிவை இறுதி யாத்திரைவரை தேடவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. சமயம், சமய அனுட்டானம் ஆகியன புனிதமான இடத்திற் போதிக்கப்படல் வேண்டுமென்பது இஸ்லாமிய மரபுக் கொள்கையாகும்.

கிறிஸ்தவ மரபும் சமயத்தைக் கல்வியின் மையமாக அமைத்து எழுந்ததாகும். சமயமே கல்வியின் கரு. தூய வாழ்க்கையில் இறைவனை அடையக் கல்வி துணையாக வேண்டும்.

## வளர்க ஞானச்சுடரே!

சிவநெறிக்காலநிதி இராசையா. ஸ்ரீதரன்

சிந்தனையைத் தூண்டிடும் சிறப்பம்சங்களைத் தாங்கியே
சிங்கார வேலவனின் சிருங்கார அட்டையுடன்
கந்தனையே நினைத்திடும் கருத்துக்கள் பலவற்றுடன்
கரங்களை அலங்கரிக்கும் கலைஞானக் களஞ்சியமே
உந்தனையே காணாமல் உள்ளமது உறங்காதே
ஒவ்வொரு திங்களிலும் உன்வரவை எதிர்பார்த்தே
வந்தனைகள் செய்திடுவோம் வரும்வரையும் காத்திருப்போம்
வளர்க ஞானச்சுடரே! ஒளிர்க உலகெங்கணுமே!

## போதுமென்ற மனம்

பிறர் உன்னை வைவார்களாயின் அவ் வன் சொற்களை இன்சொற்களாகக் கருது. நீ எக்காரணத்தைக் கொண்டும், எப்போதும் எவ்விடத்தும் பிறரை வன்சொல் கூறி வையாதே.

கிடைத்தது கூழாயினும் அதனை நெய் அன்னமாகக் கருதி உணவு செய். பழம்பாயேயானாலும் பஞ்சணையாகக் கருதிப்படு. கசப்புப் பொருளாயினும் அதனைக் கற்கண்டாகக் கருதி உட்கொள். அதனால் மெய்ப்பதங் காண்பாய்.

விடாமுயற்சிக்கு சொந்தமானதே வெற்றி என்பது.

உ

(தொடர்ச்சி..

# திருக்குறள் - திருவாசகம்: ஒரு பார்வை

டாக்டர் கஸ்தூரிராஜா அவர்கள்
(தமிழ்நாடு)

**கடவுள் வாழ்த்து:-**

திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்தில் உள்ள கருத்துக்களை இனிப் பார்ப்போம்.

இறைவனின் பண்பு நலன்களையும், வழிபடும் முறைகளையும், வழிபாட்டினால் விளையும் பயன்களையும் பொதுமறை விளக்குகிறது. திருவாசகம்

"இப்பிறப்பினில் இணைமலர்
கொய்துநான் இயல்பொடு அஞ்செழுத் தோதி"

-அற்புதப் பத்து-

என்று வெளிப்படையாக நமசிவாய மந்திரத்தை ஓதுக என்று ஆன்மாவை வழிப்படுத்திச் சைவநெறி தழைத்தோங்கச் சிவனை வழிபடுக என்கிறது.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல உலகம் ஆதி பகவனை முதலாக உடையது. சைவ சித்தாந்தக் கொள்கைகளில் தலைமையானது இறைவன் ஒருவன் என்பது. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற கருத்தின்படி இறைவன் ஒருவன். அவனே முதல்வன் என்கிறது.

"அந்தம் ஆதி என்மனார் புலவர்"

-மெய்கண்டார். சி. போ. நூ. பா. எண் 1

"தனிமாமுதல்" பெ.பு. நமிநந்தியடிகள் பா.எ. 33

"ஆதி முதல்வர்" பெ.பு. திருஞான. பா.எ. 985, 1133.

இறைவன் ஒருவன். இதனை 'ஏகன்' என்கிறார் மாணிக்கவாசகர். (சிவபுராணம் பா. எண். 5)

'ஆதியார்' என்றும் ஆதி நாயகர் என்றும் பெரியபுராணத்திற் பல இடங்களிற் சிவபெருமானைச் சேக்கிழார் குறிக்கின்றார்.

(பெரியபுராணத்தில் முப்பொருள். ப.25)

திருவள்ளுவர் இறைவனின் பண்பினை விளக்கி, அவன் திருவடி வணங்குதலே, கற்றதனால் ஆய பயன் என்கிறார். "உலகில் கற்றுக் கொள்ள வேண்டிய குறிக்கோள்களில் உலகியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதுடன், உயிரின் தேவையாகிய வீடுபேற்றிற்கான அவசியத்தையும் அதனை அடையக்கூடிய வழிமுறைகளையும், கற்றுக்கொள்வது தலைமையான குறிக்கோள்" என்கிறார் பேரா. கருவை. பழனிச்சாமி அவர்கள். (திருக்குறளும் திருவாசகமும் ஒப்பாய்வு ப.23)

இவ்வுலகத்தில் அறம் செய்வதும், பொருளை நேரிய வழியிற் சேர்ப்பதும், சிற்றின்பம் நுகர்வதும் வீடுபேறு பெறவே எனலாம். இவ்வுலகிற் பிறந்த உயிரை உயர்வு பெறச்செய்வது வீடுபேறு ஆகும்.

இதனையே திருவாசகத்தின் சிவபுராணத்திலும், திருப்பள்ளியெழுச்சியிலும் பிறப்பின் பயன் உயிரை இறைவனிடம் கொண்டு செலுத்துவது என்று நவில்வதை உணரலாம். இதனை,

"இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள்புரியும்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

என்ற அடிகளால் உணரலாம் மேலும், சிவபுராணத்தில்

"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்ற அடிகளின் மூலம் இறைவனின் திருவடிகளை நாட வீடுபேறு கிட்டும் என்பதனை அறியலாம்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்" (3)

என்ற மூன்றாவது குறட்பாவில் இறைவனை வணங்க இம்மையில் இன்பம் கிட்டும் என்பது பெறப்படுகிறது.

**திருவாசகம்**:-

இறைவனை நினைந்து நெக்குருகி வேண்ட வேண்டும். என்பதனைக் குறிப்பாகவும், பூமாலையும், பாமாலையும் இறைவனுக்கு அணிவித்து அவன் மாணடிசேர வேண்டும் என்று வழிகாட்டுகிறது திருவாசகம். எடுத்துக்காட்டாக,

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந் தேத்தேன்"

(திருச்சதகம் 14)

என்ற பாடலைக் காட்டலாம்.

இவ்வுலகத்தில் வரும் உடற்பிணியும், உள்ளச்சோர்வும் இறைவனை அடைவார்க்கு இல்லையென்பதை, (4,7,8) குறட்பாக்கள் வலியுறுத்துகின்றன. எடுத்துக்காட்டாக,

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாங்கும் இடும்பை இல" (4)

என்ற குறட்பாவைச் சுட்டலாம். நின்னருளால் என் பிறவியை வேர் அறுப்பாய் என்றே நான் உன்னை அடைக்கலமடைந்தேன் என்று, வேண்டுகிறார் மாணிக்கவாசகர், (அடைக்கலப்பத்து)

திருக்குறளும், அறக்கடலாக விளங்கும் இறைவனின் திருவடியை நினைக்காதவர், அறத்திற்கு எதிரான கடலை நீந்திக்கடக்க முடியாது என்கிறது. இதனை,

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீத்தல் அரிது" (8)

என்ற குறட்பாவால் உணரலாம்.

நாம் செய்கின்ற வினைகளே நமக்கு முன் வந்து நிற்கும். இதனைச் சிலப்பதிகாரம், மணிமேகலை - போன்ற பிற இலக்கியங்கள் வழியும் அறியலாம். எடுத்துக்காட்டாக, அறநெறிச்சார வெண்பாவைப் பார்ப்போம்.

"இறந்த பிறப்பிற்றாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக - பிறந்திருந்து
செய்யும் வினையாலறிக இனிப் பிறந்
தெய்தும் வினையின் பயன்" (பா. எண். 59)

நல்வினை, தீவினை - அவையே இம்மை, மறுமையிற் பயனை விளைவிக்கின்றன. இதனை,

"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (5)

என்கிறது குறள். இறைவனை வணங்கப், பிறவித்துன்பம் விலகும். மேலும் பிறவிக் கடலையும் நீந்த முடியும் என்பதனைப்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (10)

என்ற குறட்பா நமக்கு உணர்த்துகிறது.

இதனையே திருவாசகமும்,

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்
கடவேன்
வானேயும் பெறின் வேண்டேன் மண்ணாள்வான்
மதித்துமிலேன்
தேனையும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமான்எம்
மானேயுன் அருள்பெறு நாள் என்று என்றே
வருந்துவனே"
(திருச்சதகம்)

என்கிறது.

(தொடரும்...

பார்வைக் குறைபாடு உடைய ஒருவருக்கு இலவசமாக ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட கண்ணாடியினை நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லைமணி அவர்கள் வழங்கும் நிகழ்வு.






தென்மராட்சியை சேர்ந்த கால் ஊனமுற்ற ஒருவருக்கு இலவசமாக ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை இந்துகலாச்சார உதவிப்பணிப்பாளர் சிவ மகாலிங்கம் அவர்கள் வழங்கும் நிகழ்வு.

உ

# அருணகிரி பாடும் ஆறுபடை முருகன்

திரு. கலைமணி க. தெய்வேந்திரம் A.I. J.P. அவர்கள்

மனிதனைச் சிறந்த பண்பாளனாக்கும் சாதனங்களுள் ஆலயம் தலைசிறந்தது எனலாம். அதனாலன்றோ கோவிலில்லாவூரிற் குடியிருக்க வேண்டாமென்ற பொருள் மொழி வழங்கிவருகின்றன? எனவேதான், மூலஸ்தானம் மேவும் மேலைத்திசையின் நடுவே அமைந்த நன்னீர்க்கேணியானது தாகமும் சோகமும் தீர்த்தல் போன்று ஆத்மதாகமும் வாழ்க்கைச் சோகமும் மிக்கோர் துாநீராடி, ஆலயத்தில் அமைதிபெறும் சோதி வடிவான ஞானாகரமே செல்வச் சந்நிதியான் திருத்தலமாகும். மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் முருகனின் அமைவிடமாகி ஆரோகணித்து உயர்வு பெற்றுள்ளது.

மனிதகுல நாதவிந்து சுரேராதி தேவர்களாயும் மனித பண்பாட்டுக் களஞ்சியங்களாயும் கோவில்கள் அமைவு பெற்றுள்ளன. அவை இகபர யோக போக இன்பத்தை ஈந்தளிப்பனவாகும் இவ்வுண்மைகளை நன்குணர்த்தவே எமது வேலன் நல்லார் பலர் கூடி நயந்து வலைவீசும் தொண்டைமானாற்றின் ஓரத்தில் குழந்தை வடிவில் நின்று "எம்மை ஆதரித்து அமைவாய் ஐயனே" என்ற அசரீரி வாக்கினைக் கொடுத்தருளினார். ஆற்றின் மையத்தில் நின்று மீன் பிடித்துக் கொண்டுற்ற வைதிகத் தந்தையானவர் உடன் கரையேறி வந்து "யார் பிள்ளாய் யார் பிள்ளாய் யென அழைத்த வண்ணம் அங்குமிங்குமாகத் தேடினார். எமது ஐயன் முருகன் சிரிப்பொலி முழங்கச் சிவந்தகாலும், தண்டையும் அழகிய வேலுமாகத் தாழ்ந்து மிதந்து காட்சி கொடுத்தார்" விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே விளங்கு தீபம் கொண்டெனை வழிபடவரவேண்டும் எனப் புகன்றார் அருட்கண்பார்வை நல்கினார். வேதியர் ஏங்கி இளைத்து இசைந்து ஈரவிழிகுவிய இருகரங் குவித்து அப்பனே முருகா ஆனந்த சோதியே இழிவுகொண்ட வலைஞன் யான்புலால் பிடித்துப் பிழைப்பவன் புலாலுண்பவன் பித்தன் மாமிச வாடையகலா வயோதிபன் என்னைப் பார்த்து "உங்களை ஆதரிக்கச் சொன்னீகளே" பூசைசெய்யர் புனிதம் வேண்டும் எனக்கறிவில்லையே எப்படியப்பா என்னால் முடியும் என்று அடியற்ற மரம்போலத் தரையில் வீழ்ந்து கலங்கி வணங்கினார். உடனே முருகப்பெருமான் திருக்கை வேலினால் அவர்தம் சிரசின்மேற் பொறித்து ஞான உபதேசம் செய்தருளினார். பெரியார் எழுந்து பார்த்தபோது அழகன் முருகனைக் காணாது வியந்தார். அருள் கொடுத்த

தன்னிடமுள்ள கெட்டதை அறிந்து கொள்பவன் கெட்டவன் ஆவான்.

அண்ணல் பெருமான் ஆலம் விழுதில் அசைவுறா வெளியாக நின்று "திருவடியும் சிலம்பும் சிலம்பூடுருவப் பெருவடிவேலுமாகக் காட்சி கொடுத்து "ஐயனே அசைவுறாதே இன்றுடன் நீ அருட்கடாட்சம் பெற்றாய். அஞ்ஞானம் அகன்றது. கலானந்தம், பேதாந்தம், வேதாந்தம், சித்தாந்த ரூபராகிவிட்டாய் இனி என்னை உன்னகத்தே பூசிப்பாய். பூசனைகள் பூவரசமரத்தடியில் ஆராத் திப்பாயாக யான் துலங்கிடுவேன். தூபதீப ஒளிநடுவே" யெனத்திருவாய் மலர்ந்தருளிக் கரைந்தருளினார் எனச் சந்நிதியான் புராண வரலாறு கூறுகின்றது.

எனவே இப்பெரியாரின் அரவணைப்போடு கூடிய மரபினரால் ஒப்பரிய அபிஷேக ஆராதனைகள், அன்னதானங்கள் அமைவுற்றிலங்க எம் பெருமானின் கடாட்சப்பேறு காரண கர்த்தாவாக இருந்து வருகிறது. அத்தோடு எமது நாட்டு இந்து சமய மக்களின் பேருதவிகள் அளப்பரிய சேவைகளாகக் கிடைப் பதற்கும் தொண்டர்கள் சமய கலாச் சாரப் பணிப்பாளர்கள் அனைவரினதும் சேவைகள் மிகமிகப் பாராட்டக் கூடியதாகத் "தொட்டணைத்தூறும் மணற்கேணி போல்" மேலோங்கி வருவதும் ஈழத்தின் மிகத்தொன்மை யான பாடல் பெற்ற ஸ்தலமாக அமைவு கொண்டதும் செல்வச்சந்நிதி யானின் திருவோலக்கற்கத்திருவுலா வைப் அட்டதிக்கிலுள்ளாரும் பெருமையோடு போற்றத் தான் தோன்றீஸ்வரரான பேரருட்கந்தன் கருணையே அருள் ஞானயோகக் கடலாக மிளிர்கின்றதென்றால் அது ஒன்றே தொண்டைமானாற்று முருகன் சிறப்பினை வெளிப்படுத்துகின்ற தெனலாம். "வேலை வணங்குவதே வேலை" என்ற செந்தமிழ்த் தேன்துளி தித்திக்கத்தித்திக்க நயந்துரை பாடிப்பாடி பணிகுவாம்.

மொழி மறைமுதலேமுந்து கணபதியின் தம்பியே செந்திருவே
கழியவருபொருளே கண்ணின் மணியான திருவுருவே
கலாப மயிலேறிக்காத்தருளும் தொண்டையூர் வந்துற்றதெய்வமே - நிதம்
கார்குழலான் கனிவுற்ற கதிர்மணிச் செல்வச்சந்நிதி மேவிய புண்ணியனே

சரணம்

ஆச்சிரமப் பணிகளுக்கு உதவி புரிய விரும்பியோர் கீழே உள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

செ. மோகனதாஸ்
க. இ. P. 7481
இலங்கை வங்கி
பருத்தித்துறை
தொலைபேசி இலக்கம் 021- 2263406

உ

(தொடர்ச்சி..

# சிவபக்தியில் சிறப்புப்பெற்ற சிவனடியார் மூவர்

திரு. நா. நல்லதம்பி அவர்கள்

இவ்வாறாகப் பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்ட நாயனார், திருநீலகண்ட நாயனார், திண்ணனார் என்னும் கண்ணப்ப நாயனார் ஆகியோரது உன்னதமான அன்புநிலையைப் பார்த்தோம்.

சிறுத்தொண்டர் தமது ஐந்து வயதுப்பாலகனை அரிந்து கறிசமைத்துச் சிவனடியாருக்கு அமுது படைக்கின்ற அளவுக்குச் சிவன்மீது அன்பு வைக்கிறார்.

தினமும் சிவனடியாருக்கு அமுது உண்ணக்கொடுத்த பின்பே தாம் உண்ணும் விரதத்தில் உறுதியாக இருக்கிறார்.

அந்த விரதம் முறியக்கூடாது என்பதனால் தனது மகனையும் அரியத் துணிகிறார்.

இதற்கு அவரது அன்பு மனையாளும் தாதிப்பெண்ணும் ஒத்துழைப்பு நல்குவதும் போற்றத் தகுந்ததே.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான் வளர்த்தக்காள் வாழ்க்கைத் துணை" யாக அவருக்குக் கிடைத்திருக்கிறார்.

தந்தையும் தாயும் மனமுவந்து மகனை அரிந்தமையினாலே பெண் அடிமை என்று பேசுவதற்கில்லை.

சிறுத்தொண்டர் சிவன்பால் வைத்த அன்பும் சிவனடியாரிடம் கொண்ட அன்பும் மகத்தானவை.

திருநீலகண்ட நாயனார், இறைவனாகிய திருநீலகண்டர்மீது கொண்ட பற்றுதலைத்தெரிந்து, "திருநீலகண்டம்" மீது சத்தியஞ் செய்தமையால் அச்சத்தியத்தை மீறாமல் ஒழுகுகின்றார்.

தமது குலத்தொழிலாகிய மட்பாண்டம் வனைதலைச் செய்யும் போது சிவனடியாருக்காகத் "திருஓடு" செய்வதையும் பார்க்கிறோம். மனையாளையன்றி, வேறு எந்தப் பெண்ணையும் மனத்தினாலும் "தீண்டாமை" விரதங்கொண்டு மூப்புப் பிணியும் கிட்டியபோதும் அதனைப் பின்பற்றுகிறார்.

'இல்லறமல்லது நல்லறம் அன்று' என இல்லறத்துறவியாகவே நின்று சிவனன்புக்குப் பாத்திரராகிப் பேரின்ப நிலையை அடைகிறார்.

சிறுத்தொண்டரும் திருநீலகண்டரும் இல்லறத்தில் நின்று சித்தத்தைச் சிவன்பால் வைத்து வாழ் நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர்கள்.

ஆனால், கண்ணப்ப நாயனாரோ ஐந்து நாட்களே தொண்டு செய்து

அன்பு நிலையிலே சிவபெருமானது பரீட்சையிற் சித்தி (முத்தி) பெறுகின்றார்.

தமக்குத்தாமே வைத்தியம் பார்க்கும் வைத்தியர்கள் இருக்கிறார்கள். ஊசி ஏற்றுவதோடு சிறு சத்திர சிகிச்சையையும் தாமே தமக்குச் செய்வார்கள்.

ஆனால், கண்ணப்பர், தமது அன்புநிலை காரணமாகச் சிறந்த உறுப்பாகிய 'கண்ணையே' தோண்டி எடுத்து வேறோரு நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியராகச் செயற்படுவதைச் சேக்கிழார் நமக்குக் காட்டுகிறார்.

தான், சிவனடியார் மேல் வைத்துள்ள அன்பினாலே தனது பிள்ளையை அரிகிறார் சிறுத் தொண்டர். இங்கே கண்ணப்பர், தனது சிவபக்தியைக் காட்டுவதற்காகத் தனது கண்ணையே தோண்டி எடுக்கிறார்.

"அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு

என்று வள்ளுவர் சொன்ன இலக்கணத்தில் வாழ்ந்த ஒருவரைக் காண்கிறோம்.

ஆறே ஆறு நாட்களில் சிவ அன்பினில் உச்சநிலை பெற்று பேரின்பம் அடைகிறார் என்னும்போது, இதற்குப் பூர்வீகப் புண்ணியமும் காரணமாகிறது. என்பதையும் நாம் உணரவேண்டும்.

"........ போனநாட்செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்" ஆகும்.

இங்கே நாம் காணும் நாயனார்கள் மூவரைப்போல் அன்பு செலுத்தி இறைவனை அடையும் வல்லமை என்னிடம் இல்லையே என்று கவலைப்படும் அடியார் ஒருவரை முதலாவது பாடல் காட்டுகிறது. இரண்டாவது பாடல், கண்ணப்பநாயனார் இறைவனிடம் காட்டிய அன்புநிலை தனக்கு வரவில்லையே எனக் கழிவிரக்கங் கொண்டு மாணிக்கவாசக சுவாமிகள் பாடியது.

தமக்குக் கண்ணப்ப நாயனாரைப் போன்ற இறை அன்பு நிலை வராவிட்டாலும், தன்னை ஆட்கொண்டு இறைவன் தனக்கும் அருள் செய்திருக்கிறார் என்பதாக அவர் காட்டுகிறார்.

மேலும், மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்தில் ஒழுகி, இறையருள் பெறுகிறார். தன்னைப் பாவியேன்,நாயேன், நாயிற்கடைப் பட்டவன் என்றெல்லாம் தாழ்த்திக் கூறுகின்றார்.

பெரியவர்கள், நான், எனது என்ற அகங்கார, மமகாரங்கள் அற்ற வர்கள். அப்படித்தான் கூறுகின்றனர். இதனை "அவையடக்கம்" என்று

பிறரை அளவுக்கதிகம் நம்புவதே பலர் அழிவுக்குக் காரணம்.

சொல்லலாம். அன்றியும், கண்ணப்பரது அன்புநிலை மிகவும் உயர்வானது; எவராலும் செய்யமுடியாதது என்பதையும் வாதவூரர் சிறப்பித்துப் பாடியிருக்கலாம்.

அல்லது, நமக்கு ஒரு பாடம் கற்பிப்பது போலவும் அவர் காட்டியிருக்கலாம்.

கண்ணப்பரது அன்புநிலை எமக்கு வராவிட்டாலும் நாம் ஏதோ ஒரு வகையில் முயன்று இறைவனது அன்புக்குப் பாத்திரமாகியதனால் இறைவன் எம்மையும் "ஆட்கொண்டருளினான்" அதுபோல, எல்லா ஆன்மாக்களும் இறைவனிடத்திலே அன்பு வைத்துப் பேரின்பநிலை பெறுதல் வேண்டும் என எமக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார் என்று கொள்வோமாக.

அன்பே சிவம். (முற்றும்)

## விநாயகப் பெருமானின் பெரிய காதுகள்

பிள்ளையாருக்கு இருப்பது போன்று வேறு எந்தத் தெய்வத்துக்கும் அவ்வளவு பெரிய செவிகள் இல்லை. "ஓம் சூர்ப்பகர்ணாய நம" என்பது விநாயகர் துதி. சூர்ப்பம் என்றால் முறம்; பிள்ளையாருக்கு முறம் போன்ற காதுகள் ஏன் அப்படி? "நாம் எல்லோரும் பிறவிப் பெருங்கடலில் கிடந்து உழன்று பிள்ளையாரின் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றியிருக்கிறோம்" ஐயோ! இந்தக் குழந்தைகள் என் பாதத்தைப் பிடித்துக் கொண்டார்களே! இவர்களை விரைவில் கரைசேர்க்க வேண்டுமே! விரைவாகக் கொண்டு செல்வோம்! என்று தமது முறம் போன்ற காதுகளை அசைத்துக் காற்றைக் கடந்து செல்கிறார் விநாயகப் பெருமான் நமக்காக!

## ஆட்டி வைப்பது ஆசை

மனிதனை நல்வழியில் போக விடாமல் கட்டும் வலிமையுடையது ஆசையாகிய சங்கிலி, எத்தனை வந்தாலும் போதாது என எண்ண வைத்து மனிதனைப் பேயாய் அலைய வைத்து ஆட்டி வைப்பது ஆசை.

பெருங்காட்டிலே அகப்பட்ட பஞ்சைப்போல், ஆசையால் மனம் அலையும். அதனால் கல்வி, கேள்விகள் யாவும் அழிந்து போகும்.

சிறிய உதவிகளை மறக்காதே ஆனால் சிறிய தவறுகளை மறந்துவிடு.

உ

# சிவராத்திரியில் வழிபடும் சிவனின் சிறப்பு

மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன் அவர்கள்

| | | | |
|---|---|---|---|
| பிட்டுக்கு | மண்சுமந்த | பெருமானை | மனையாட்டி |
| கட்டுக்குள் | கைகட்டி | நின்றானை | கணக்குன்றிப் |
| பிரம்படிகள் | பெற்றானை | பேசும்திரு | வாசகத்தில் |
| தரம்காத்து | வாழ்வானை | தமிழ்காத்து | ஆள்வானை |
| இடுகாட்டில் | கூத்தாடி | இரவெல்லாம் | அலைவானை |
| இடும்பா | வனத்தில் | இறையாகிக் | காப்பானை |
| முல்லை | மலர்போல | முத்தமிழைப் | பூப்பானைத் |
| தில்லைப் | பெருமன்றில் | திருநடனம் | செய்வானை |
| கங்கைத் | தலையானைக் | கருநீலம் | உண்டானை |
| மங்கையவள் | மீனாளின் | மனத்தில் | நிலைத்தானை |
| பற்றெல்லாம் | விட்டுப் | பரதேசி | ஆனானை |
| கற்றைச் | சடையானைக் | கைலாய | மலையானை |
| சுடலைப் | பொடியானைச் | சுடுகாட்டில் | கிடப்பானை |
| கடலை | நிகர்த்த | கருணை | மனத்தானை |
| காளைக் | கொடியானை | கயற்கன்னி | அம்மையை |
| ஆளும் | நாயகனை | ஆடலிலே | வல்லானை |
| ஆனைத்தோல் | புலித்தோலால் | அங்கம் | மறைத்தானை |
| வாளை | அளந்தாளை | வண்டமிழைப் | பூப்பாளை |
| வில்லடியும் | கல்லடியும் | சொல்லடியும் | விருப்பமுடன் |
| நல்லடியாய் | பெற்றானை | நச்சரவம் | பூண்டானை |
| எல்லோரும் | சிவராத்திரியில் | சிவனை | வணங்குவோம். |

**பக்தியே பெரியது**

பணத்தின் துடுக்கினாலும், படிப்பின் முறுக்கினாலும் பரமனைக் காண முடியாது. பக்தி ஒன்றாலேயே காணலாம். முற்பிறப்பில் அறஞ்செய்யாது தீவினை புரிந்தோரை வறுமைப்பேய் பிடித்து அல்லற் படுத்தும்.

கடவுள் பெயரைச் சொல்லித் தொடங்கிய காரியம் கெட்டுப் போகாது.

(தொடர்ச்சி..

உ

# அருணகிரி சுவாமிகள் அருளிய கந்தரலங்காரம்

பண்டிதர் திரு. சி. வேலாயுதம் அவர்கள்

### வள்ளிக் கணவனே மணிமுடி

நெற்றாப் பசுங்கதிர் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கிணிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார் கினியவன் றேவேந்த்ர லோக சிகாமணியே.

முதிராத பசுமையாகிய கதிர்களுடைய சிவந்த தினைப்புனத்தைக் காவல் புரிகின்ற நீலவண்ணமுள்ள வள்ளிநாயகியின் முற்றாத இளம் கொங்கைகளுக்கு இனிய தலைவராகிய பெருமான் யாவரெனில், கரும்பு வில்லும் முல்லை மலராகிய அம்பும் அம்புக்கூடும் அதைப்பற்றியிருந்த உடலும் தீய்ந்து சாம்பராகும்படி நெற்றிக் கண்ணால் எரித்தவராகிய சிவபெருமானுக்கு இனியவனும் தேவேந்திர உலகத்திற்கு மணிமுடிபோன்றவனும் முருகக்கடவுள் ஆவார்.

(நெற்று- பழமுதிர்ச்சி, இக்கு- கரும்பு, யாக்கை- உடல்,

### தானப்பயன் எப்போதும் உதவும்

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே

அறம்புரியாது கெட்டுப்போகும் மனிதர்களே! மிகுந்து ஒளிக்கும் கடலின்மேல் வேற்படையைச் செலுத்திய முருகப்பெருமானின் திருவருளைப்போலவே இரந்தவர்க்கு இட்ட பலன், தப்பாமல் எவ்விடத்திலாயினும் உங்களை நாடிவரும். அவ்விதம் கொடுக்காமல் மூலையில் பொதுக்கி வைத்திருந்த பொன்னும், உங்களது அழகிய வீடுகளும், மனைவியரும் உயிரானது யமபுரிக்குப் போகின்ற அந்தத் தனிவழியில் துணையாக வருமோ.

## துக்கம் நீங்கவகை செய்திலேன்

சிந்திக்கிலே னின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கிலே னுண்மை சாதிக் கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக்கிலே சமும் போக்குதற்கே.

மனத்தின் கிலேசங்களையும், உடலின் துன்பங்களையும், அறவே அகற்றுதற் பொருட்டு மயிலை வாகனமாகவுடைய முருகப்பெருமானை தியானம் செய்கின்றேனில்லை. அவன் ஆலயங்களுள் முன்னின்று நினைக்கின்றேனில்லை, தண்டையணிந்த திருவடியை வணங்குகின்றேனில்லை, அவன் பெருமை பலவற்றுள் ஒன்றையாவது சொல்லி வாழ்த்துகின்றேனில்லை. அப்பரம் பொருளைச் சேர்கின்றேனில்லை, பொய்மையை இகழ்ந்து நீக்கினேனில்லை, சத்தியத்தை நிலைநாட்டினேனில்லை.

## பஞ்சபூதாதிகள் போய்

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்த வா பஞ்சபூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுத்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

பஞ்சபூதங்களும் நீங்கி, பேச்சு அற்று, அறிவு அற்று, சரீரம் அற்று, உயிரின் தன்மையும் அற்று, உபாயம் அற்று, எல்லை அற்று, இருள் அற்று, எனது எனும் மமகாரம் அற்று, பரம்பொருளே தானாக இருக்கும் அந்த உணரும் பொருளை கிரவுஞ்சகிரி அற்று அசுரரின் தலையறுபட்டு கடல் வற்றுமாறு வெகுண்ட குற்றமற்ற வேற்படையை உடைய முருகப்பெருமான் ஞானோபதேசம் செய்தவாறு என்னே!. (தொடரும்...

**எண்ணெய் போக**

எண்ணெய் படிந்த காகிதத்தில் மை படியாது. அதுபோல பந்த பாசம் படிந்த உள்ளத்தில் அருள் தோன்றாது. எண்ணெய் போக சுண்ணாம்பு தடவு. பாசம் விலக சாதுக்களோடு பழகு, அறநூல்களைப் படி.

முதுமை பக்குவத்தின் அடையாளம்.

உ

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

## மாதரின் நல்லொழுக்கம்

திரு. வ. குமாரசாமிஐயர் அவர்கள்

மாதரின் தன்மைகள் எப்படி அமைந்திருக்க வேண்டும்? என்ற கேள்வியை யுதிஷ்டிரர் வினா வியதனால் பீஷ்மர் பெண்களின் தன்மைகளை தேவலோகத்தில் சுமனை சாண்டவி என்ற பெண்களின் உரையாடலை வைத்தே விளக்கிக் கூறலானார். சுமனையை நோக்கி சாண்டவி கூறத்தலைப்பட்டாள். காவி உடை அணிந்தோ, மரவுரி தரித்தோ, சடை வளர்த்தோ யான் இல்லத் தினின்றும் நீங்கித்தவம் செய்தோ தேவலோகம் வந்து சேர்ந்தேன் இல்லை. இல்லத்தில் வாழ்ந்து எனது கடமைகளைச் செவ்வனே செய்தேன். எனது கணவனின் உள்ளம் வேதனை யடையும் வண்ணம் நான் ஒருபோதும் உரையாடுவதில்லை. பெற்றோருடன் இருந்த காலத்தில் பெற்றோருக்கும், மணம் செய்துகொண்டதன் பின்பு மாமன் மாமியாருக்கும் மற்றும் பெரியோர்கட்கும் அடங்கி, அவர் கட்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டேன்.

எனது கணவனுக்குத் துன்பம் ஏற்படுத்தக் கூடிய காரியங்களை நான் செய்வதில்லை. கணவர் எனக்கு மட்டும் கூறிய இரகசியமான விடயங் களை ஒருவருக்கும் கூறியதில்லை. கணவனுக்குப் பணிவிடைகள் செய் வதில் மிகக்கவனத்துடன் ஈடுபடுவேன். அவர் விரும்பும் உணவுவகைகளைப் பக்குவமாகத் தயார் செய்து கொடுப் பேன். கணவர் விரும்பாத எச்செயலையும் நான் செய்வதில்லை வீட்டுக்காரியங்கள் அனைத்தையும் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பேன். கணவர் வெளியூர் சென்றிருக்கும் வேளைகளில் அவர் சென்ற காரியம் வெற்றி பெறவேண்டும் என்று பிரார்த் தனைப் பூஜைகளில் ஈடுபட்டிருப்பேன். கணவர் வெளியூர் சென்றிருக்கும் வேளைகளில் ஆபரணங்கள் அணிந்து மலர் சூட்டி; மையிட்டு அலங்கரித்திருப் பதைத் தவிர்த்துக் கொள்வேன்.

கணவர் அயர்ந்து உறங்கும் வேளைகளில் அவரைத் தூக்கத் தினின்றும் எழுப்புவதில்லை. வீடு வாசல், பாத்திரம் எல்லாவற்றையும் சுத்தமாக வைத்திருப்பேன். ஒருவரைப் பற்றியும் அவதூறு பேசுவதில்லை, ஒருவருடனும் நெடுநேரம் நான் பேசிக்கொண்டிருந்து எனது நேரத்தை வீணாக்குவதில்லை. பேசத் தகாத

கைக்கு வராததைக் கணக்குப் பார்க்காதே.

வர்களுடன் பேசுவதில்லை. நிற்கக் கூடாத இடங்களில் நிற்பதில்லை. அயலவர் உறவினர்களை அன்புடன் அரவணைத்து நடந்து கொள்வேன். எப்பொழுதும் சுத்தமாக இருப்பேன், எந்நேரமும் இன்முகத்துடன் இருப்பேன். கோபம் பொறாமை என்பனவற்றை அடக்கி மிகப் பொறுமையுடன் வாழ்ந்து வந்தேன். இத்தகைய சீலங்களை நான் கடைப்பிடித்து வாழ்ந்தமையால்த்தான் இன்று நான் தேவ உலகில் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றேன். என்று தனது தன்மைகளை எடுத்துரைத்தாள்.

பெண்களின் தன்மைகளைப் பிதாமகர் கூறிமுடித்ததும் அவற்றை செவிமடுத்திருந்த யுதிஷ்டிரர் மீண்டும் ஒரு வினாவை வினாவினார். "பிதாமகரே நல்லோர், தீயோர் நடத்தைகள் எப்படி அமைந்திருக் கும்? அவற்றை தயை கூர்ந்து விளக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பிதாமகர் பீஷ்மர் எடுத் துரைக்கத்தொடங்கலானார் "தரும நந்தன! தீயவராய் இருப்பவர்களின் செயலும் சொல்லும் தீயவையாகவே இருக்கும், அவர்களிடம் கட்டுப்பாடு என்பதே இருக்காது. அவர்களைக் கட்டுப்படுத்துவதும் முடியாது. அவர்களிடம் அடக்கம், அன்பு என்பன இருக்கமாட்டாது. இதனால் இவர்கள் தீமைகளையே எப்பொழு தும் செய்வார்கள்.

இனி நல்லோரின் இயல்பு எப்படி இருக்கும் என்பதனைக் கூறுகிறேன் கேட்பாயாக. நல்லவர்கள் உணவருந்தும்போது பேசக்கூடாது. ஈரக்கையுடன் உறங்கக்கூடாது. வயது முதிந்தவர்கள், சுமை தூக்கி வருபவர்கள், பெண்கள், நோயாளர் கள், சிறுவர், பிராமணர், பசுக்கள், மன்னர் முதலானோருக்கு வழிவிட வேண்டும். விருந்தினர், வேலைக்காரர், சுற்றத்தவர் எல்லோருக்கும் ஒரே தன்மையான உணவழிக்கவேண்டும். தான் மட்டும் தனித்துச் சிறந்த உணவை உண்ணக்கூடாது.

வாக்காலும், மனதாலும் நல்லொழுக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். அடைக்கல மாய்த் தன்னை நாடி வருவோரைக் காப்பாற்ற வேண்டும். காலை, மாலை இரண்டு வேளைகளில் மட்டும் உணவருந்த வேண்டும். இடையில் எவ்வித ஆகாரமும் புசிக்கக்கூடாது. இவ்வாறு உணவு உட்கொள்வது உபவாசம் இருப்பதற்குச் சமமானது. புத்திர பாக்கியம் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமே பெண்களுடன் (மனைவியுடன்) சேர வேண்டும். அந்நிய நாட்டில் வசிக்கநேர்ந்தாலும் தமது பண்பொழுக்கங்களைப் பேணிக் காப்பாற்ற வேண்டும். வேறிடங்களில் வசிக்க நேரும்போதும் கூட விருந்தோம்பலைக் கைவிடக் கூடாது. வயதிற் பெரியோர்களை, அவமதிக்கக்கூடாது. அவர்களை வேலைசெய்ய ஏவுதல் கூடாது. முதியோர்கள் நிற்கும்போது தான் உட்கார்ந்திருக்கக்கூடாது. குறைவான

தேளுக்கு மணியம் கொடுத்தால் நொடிக்கு நொடி கொட்டும்.

ஆடையணிந்திருக்கும் ஆடவர் பெண்களைப் பார்க்கக்கூடாது. மனச் சுத்தமே சுத்தங்கள் அனைத்திலும் சிறந்தது. ஞானத்தை அறிந்து ஞான வழிமுறையைப் பெறுவதே சிறந்த அறிவாகும். மனத்திருப்தியே ஒருவனுக்கு கிடைக்கக்கூடிய மிக மிக உயர்ந்த செல்வமாகும். மாலை வேளைகளில்ச் சான்றோர்களை அணுகி அவர்களின் உபதேசங் களைக் கேட்க வேண்டும்.

புலனடக்கம், மன அடக்கம் இரண்டையும் எப்பொழுதும் பழகிவருதல் வேண்டும். பாவங்கள் என்று வரையறை செய்யப்பட்டவை எதனையும் எக்காலத்திலும் செய்யக் கூடாது. அதுமட்டுமன்றி மறைக்கப் பட்ட பாவம், பாவவழிகளின் செல்ல மேலும் மேலும் வழிவகுக்கும். எனவே ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பாவம் செய்திருப்பின் அதனைச் சான் றோரிடத்து வெளிப்படுத்தி பாவ நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

தர்மமே மேன்மைக்குக் காரணம் என்பதனை சகலரும் அறிந்திருக்கின்றனர். தர்மத்தை தனது மன உந்துதலினாற் செய்ய வேண்டும். ஆடம்பரமும் படாடோபமும் செய்யக் கூடாது. கொல்லாமை, சத்தியம், பொறுமை, கொடை என்பவற்றை ஆராய்வு ஏதுமின்றி நீ கைக்கொண்டொழுகுவாயாக. இந் நான்கும் தர்மத்தின் ஊன்று கோல்களாக விளங்குகின்றன. உனது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் நீயும் உனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு நடப்பாயாக" இப்படியாகப் பற்பல தர்ம உபதேசங்களையும் பீஷ்மர் அன்று உபதேசித்தார். இப்படியாக ஐம்பது நாட்கள் வரை சென்று பீஷ்மரின் உபதேசங்களைப் பாண்டவர்கள் கேட்டறிந்து கொண்டனர். ஐம்பதாவது நாளின் பின்னர் பீஷ்மர் கருத்திற் கொண்டு காத்திருந்த உத்தராயண காலம் வந்தது.

பீஷ்மரின் உபதேசங்கள் ஒவ்வொன்றும் உண்மையாக மனிதன் மனிதனாக வாழ வழி செய்பவை. பெண்களின் கடமை என்பது எவ்வளவு உத்தமமானது என்பதனை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். பெண்ணிற்கு இவ்வளவு சிறப்பு ஏன் என்பதனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணினாலும் ஒவ்வொரு குடும்பம் பாதுகாக்கப்படுகிறது. பெண் பொறுப் புணர்வும், நல்லொழுக்கமும், நற்பண்பும் உள்ளவளாக இருக்கும் குடும்பங்கள் மேன்மைபெறும் என்பதனை நாம் உளம் கொள்ள வேண்டும். ஏனெனில் குழந்தைகளைத் தன் உதிரத்தால் வளர்த்தெடுக்கும் அன்னையின் மனவியல்புகள் குழந்தை களிடம் அப்படியே படிந்து விடுகின்றது. இதனால் ஒவ்வொரு மனிதரையும் பெற்றெடுக்கும் அன்னையின் இயல்புக்கேற்றவாறு குழந்தைகள் மனநிலை அமைகிறது. இவையெல் லாம் எல்லோரும் அறிந்திருக்கும்

சாதாரண விடயங்கள் எனினும் அவற்றால் பெண்களின் மனப்பாட்டுக் கமையவே ஒவ்வொரு சமூகமும் அமைகிறது என்று ஒருவரும் நடைமுறை வாழ்க்கையில் சிந்திப்பதே இல்லை. அன்னையின் வழிகாட்டலே குழந்தையின் அத்திவாரம் என்று சிந்திப்பதும் இல்லை. ஒவ்வொரு அன்னையின் முன்னும் ஒரு சமுதாயத்தை மேம்படுத்தும் பெரும் பணி வைக்கப் பட்டுள்ளது என்று அன்னையர் ஒருவரும் சிந்திப்பதில்லை.

அதிலும் இக்காலத்து அன்னையர் குழந்தைகளை எவ்வளவு செல்லமாகவும், பிடிவாதம் உள்ளவர்களாகவும் வளர்ப்பதே மேலானது என்று சிந்திக்கிறார்கள். குழந்தைகளைக் கண்டிப்புடன் வளர்க்கும் பெற்றோர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது. அதிக பணவருவாயினால்ப் பிள்ளைகளின் இஷ்டத்துக்கு நடந்து கொள்கிறார்களே அன்றிப் பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் நோக்கில் வளர்த்தெடுத்தல் குறைவாகவே காணப்படுகிறது. இவற்றை எல்லாம் சிந்தித்து அன்னையர் தம் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள மகத்தான பொறுப்பை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

(தொடரும்..

அறநெறிச் சிந்தனை I

## கடவுள் ஒருவர் இருக்கின்றார்

கவிஞர். வ. யோகானந்தசிவம் அவர்கள்

கடவுள் ஒருவர் இருக்கின்றார்
கருணையுடன் எம்மைக் காக்கின்றார்
இடர்கள் வந்து சேர்ந்தாலும்
இறைவனை என்றும் மறவாதே
நடனம் ஆடும் நாயகனே
நாளும் உலகை ஆட்டுகின்றான்
திடமாய் அவனைப் பற்றிவிடு
சிறந்த வாழ்வு பெற்றிடுவாய்

உழைப்பும் ஊக்கமும் திறமையை உண்டாக்கும்.

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி. சிவப்பிரகாசம் அவர்கள்

இறைவனைப் பணிந்து துதித்துப் பக்திசெய்யும் பேறு எல்லோருக்கும் எளிதிற் கிடைப்பதில்லை. ஆன்மாவைப் பீடித்துள்ள மலங்கள் இறைவனை அணுகவிடாது தடுத்து நிற்பதால் காலத்தை வீணாக்கி விடுவோம்.

இறைவனது அருளாலேயே அவனைப் பணியும் பேறு கிட்டியதாகப் பல இறையடியார்களும் பாடியுள்ளனர். அப்படி இறைவனது அருளால் அவனை உணர்ந்து பக்தி செய்யத்தொடங்கியதும் தாம் வீணே காலங்கடத்தியதை எண்ணியெண்ணி மனம் நோவதையும் அவர்களது பாடல்களிலே காணலாம்.

கருவூர்த்தேவர் தாம் பாடிய திருவிசைப்பா பாடல்களிலே இத்தகைய தனது அனுதாபத்தைப் பாடியுள்ளதைக் காணலாம். "நெகிழ்ச்சியற்ற கல்போன்ற உள்ளமுடைய நான் உன்னைக் கண்டு கசிந்துருகியதுமில்லை".

கண்ணெகா உள்ளக் கள்வனேன் நின்கண்
கசிவிலேன் கண்ணில்நீர் சொரியேன்

என்று ஒரு திருவிசைப்பாவிலே தனது முன்னைய நிலையைக்கூறி "அப்படி தானிருந்தும் என் ஆவியுட்புகுந்தாய்" என்பார்.

கனவைப் போன்று மறையும் செல்வத்திற்காக ஐம்புலன்களோடு (ஐம்பொறிகளோடு) எனக்கு ஏற்பட்ட கலகத்தைப்போக்கி என்னுள்ளே புகுந்து ஆட்கொண்டாய்

அக்கனா அனைய செல்வமே சிந்தித் (து)
ஐவரோ (டு) என்னொடும் விளைந்த
இக்காலம் முழுவதும் ஒழியவந் (து) உள்புக் (கு)
என்னை ஆள் ஆண்டநா யகனே

என மற்றொரு பாவிலே பாடி ஏங்குவார்.

"உனது பாதகமலங்களை என்னைப் பணியச்செய்தாய். எனது என்பெலாம் உருகும்படியாக எளிதில் எழுந்தருளிவந்து, உன்னை என்னுள் வைத்து எல்லாவிடமும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்து நின்ற அழகிய சுடரே" என்று தான் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தை வேறொரு பாவிலே கூறுவார்.

பெரும்பாலோர் செய்வதுபோல் செய்தால் நல்ல பெயர் எடுக்கலாம்.

"கரையாத கல்நெஞ்சக்காரனைத் தன் பாதங்களைப் பணிய வைத்தது மல்லாமல் அவனது என்பும் உருக வைத்தவன் அச்செயலைக் கஷ்டப்படுத்தியும் செய்யவில்லை. எளிதாக எழுந்தருளி வந்தான். தானே தன்னைக் கரைந்துவிட்ட உள்ளத்துள் வைத்தான். அழகிய ஒளியாய் நீக்கமற எங்கும் எப்போதும் நிறைந்தான்" என்று கருவூர்த்தேவர் கூறியுள்ளார்ரென்பதை அவரது மற்றைய பாக்களையும் சேர்த்து நோக்கும் போதே புலனாகும்.

இச்சந்தர்ப்பத்தில் திருமாளிகைத்தேவர் தனது திருவிசைப்பாவிலே "ஒளிவளர் விளக்கே" என்றும் பிறவித்துன்பத்தை நீக்கி, என்னை ஆட்கொண்டு, என்னுள்ளேயிருந்த (அஞ்ஞான) இருளை அறவே இல்லாது செய்த பிரகாசிக்கும் அழகிய விளக்கின் உள்ளொளியாய் விளங்குகின்ற தூய்மையான நல்ல சோதியுள்ளே ஒளிரும் சோதியே

இடர்கெடுத் (து) என்னை ஆண்டுகொண் (டு) என்னுள்
இருட்பிழம் (பு) அறஎறிந் (து) எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதி

என்றும் பாடியுள்ளதையும் பார்க்கும்போது அஞ்ஞான இருளகற்றி எங்கும் வியாபித்து நிற்கும் காரணத்தால் இறைவனை ஒளி வடிவாகக் கண்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

கருவூர்த்தேவர் தன் அனுபவத்தைத் தொடர்ந்து பாடும் பொழுது 'எனது முன்னைய மலங்களை முழுவதும் அகற்றித், திருமுகத்தலை என்னும் தலத்தில் எழுந்தருளி எனக்குக் கருப்பஞ்சாறும் பாலும் தேனும் ஆரமுதும் கனியும் போன்று இனிமையாகினாய்' எனப் பாடுவார்.

என்னையுன் பாத பங்கயம் பணிவித் (து)
என்பெலாம் உருகநீ எளிவந் (து)
உன்னைஎன் பால்வைத் (து) எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகுத்தலை அகத்தமர்ந் (து) எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனியையா யினையே

என்பது அவரது திருவிசைப்பா.

திருமாளிகைத்தேவர் அற்புதமான சோதியைப் பாட முயன்றது போலவே, கருவூர்த்தேவர், மனத்துள் உறைந்த இறைவனின் இனிமையைப் புலப்படச் செய்வதற்கு மூவுலகிலுமுள்ள இனியவை அனைத்தையும் சேர்த்துப் பாடியுள்ளார். தன் முயற்சியில் தோற்ற ஆதங்கம் அவருக்கு இருந்திருக்கலாம்.

இவர் அடுத்த பாவிலே
எம்பிரா னாகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயுமா யினையே
என தன்னை ஆட்கொண்ட

இறைவன் தன் தந்தையும் தாயுமாகிவிட்டதாகவும் பாடியுள்ளார்.

எனவே, இறைவனை வணங்காதிருந்த கருவூர்த்தேவரைத் தன் பாதங்களைப் பணியவைத்து, உருகவைத்து, உள்ளத்துட் புகுந்து, ஒளியாய் நிறைந்து மலங்களைப்போக்கி இறைவன் ஆட்கொண்டதாக அவரது பாக்கள் கூறுகின்றன.

## பிறவிப் பெருங்கடல்

ஒருவன் ஆயிரம் பவுண்களைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அவன் பவுண் மூட்டையைத் தலையிலும் மனைவியை இடது தோளிலும், மகனை வலது தோளிலும் சுமந்து கொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. மூன்று சுமைகளும் அவனை அழுத்தின. ஏதாவது ஒன்றைவிட்டால் சுமை குறையும். நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கறை வந்தது. பொன் மூட்டையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்திவிட்டான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. இப்போது இன்னும் ஒன்றை விட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான். மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டு விட்டான். சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல். பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒவ்வொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெற வேண்டும்.

உ

(தொடர்ச்சி..

# யார் இந்த (ச்) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

***ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்***

### குருநாதரின் வழிநடத்தலில்

சுவாமிகளும் எல்லாவற்றையும் கேட்டார். பின்பு அம்மையாரிடம் பின்வருமாறு கூறினார்.

"ஓம் ஓம் நீ பெரிய பணக்காரியல்லே! அடியவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தனான் என்று உனக்குள்ளே ஒரு பெரிய நினைப்பு என்ன? இப்ப பாத்தியே! ஆணவம் கழன்றால்தான் அநுபூதி கிடைக்கும். அதற்காகத்தான் உன்னைப் பிச்சையெடுக்க விட்டனான். மற்ற விடயமும் ஒன்று உள்ளது. பிச்சையெடுக்கிற நேரம் கவனித்தாயோ? ஒவ்வொருவரும் தன்னுடையது தன்னுடையது என்று பிடித்து வைத்திருக்கிறார்களே! கவனித்தாயே? ஆனால் எல்லாம் இறைவனுடையது என்று அவர்களுக்குத் தெரிய வில்லையே"

சுவாமிகளின் இக்கூற்றுக்கள் அம்மையாரின் உள்ளத்தில் ஆழப்பதிந்தது தாம் தமது முன்னைய குடும்ப வாழ்வில் செல்வத்தில் இறுமாந்திருந்தது எல்லாம் எவ்வளவு முட்டாள்த்தனமானது. அறிவீனமானது என்பதை உணரலானார். மேலும் சுவாமிகள் "உன்னை யார் எது சொன்னாலும் திருப்பி ஏச வேண்டாம் என்று கூறியிருந்தேன். பின்பு ஏன் சில வீடுகளில் பிச்சையெடுக்கப் போவது மனத்தைப் பக்குவப் படுத்தவேயன்றி வேறெதற்கு இனிமேல் இப்படி நடந்து கொள்ளாதே என அறிவுரை கூறினார்.

அம்மையாரைத் தவவாழ்வில் புடம் போடுவதற்காகவே பிச்சை எடுப்பதற்காக சுவாமிகள் அனுப்பினார். அம்மையாரும் இதன் மூலம் பல அனுபவங்களைப் பெற்றவராக தவவாழ்வில் இன்னும் உறுதிபெற்று விளங்கினார். சுவாமி களின் சமயாசமய அறிவுரைகளும் அவரிற்குப் பெரிதும் துணை புரிந்தன.

அன்றைய இரவை செல்வச் சந்நிதி தம்புச்சாமி மடத்தில் கழித்தார் அம்மையார். காலையில் அம்மையாரின் உறவினர்கள் அனுப்பிய சேலையை சுவாமிகளின் அனுமதியுடன் கட்டிக்கொண்டு கைதடியை வந்தடைந்தார் அம்மையார். இங்கு அம்மையாரின் தவக்குடிலுக்கு நெருப்பு வைக்கத் தயாராக இருந்தனர் ஊரவர்கள். மெய்யடியார்களைப் புரிந்து

தவறு செய்வது மனித இயல்பு; மன்னிப்பது கடவுள் இயல்பு.

கொள்ளும் திறனற்றவர்களாக அவர்கள் இருந்ததனால் அவர்கள் அவ்வாறு செயற்படமுயன்றனர். அம்மையாரும் மனம் நொந்தவராக சுவாமிகளிடம் "சுவாமி இவ்விடம் நான் வசிப்பது சரிவராது. என்னைப் பளைப்பகுதியில் ஆரும் அடியவர்கள் மடங்களில் விட்டுவிடுங்கோ" என முறையிட்டார். ஆனால் சுவாமிகளோ, "அம்மா எந்த இடம் உன்னை இகழ்கிறதோ அங்கிருந்துதான் நீ தவம் முடிக்க வேண்டும். அதுதான் உனக்கும் நீ கொண்ட தவத்திற்கும் பெருமை. நீ, இங்கேயே இருந்து தவம் முடிக்க வேணும் உனக்கு ஒரு குறையும் வராது" என்று கூறி அம்மையாரை ஆறுதல்படுத்தினார்.

"இறைவனும் குருவும் ஒன்றுதான்" என சுவாமிகள் அடிக்கடி கூறுவதுண்டு. வேண்டுவார் வேண்டுவதை ஈயல்ல இறைவன் குருவாகவும் வந்து ஆட்கொள்ளுவான் என்பது அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் பாமரருக்கு விளங்காத விடயம் அத்துடன் அவர்களிற்கு சிரிப்பான விடயமும்கூட. இத்தகைய எண்ணம் கொண்டதால் தான் அம்மையாரையும் ஏளனத்திற்குள்ளாக்கினர். ஊரவர்களும் உறவினர்களும் இறைவனின் பெருமையையும் ஆட்கொண்ட குருநாதனின் மகிமையையும் அவர்கள் புரிந்திலர். அதனால் அம்மையாரின் தவ வாழ்வினை ஏளனம் செய்த தோடல்லாமல் இடையூறுகள் பலவும் செய்த வண்ணமிருந்தனர். இவ்வாறான நிகழ்வுகளையெல்லாம் காணும் போது அம்மையாரிற்கு மாணிக்கவாசகரின் அனுபவ மொழிகள் நினைவுக்கு வரும். அதாவது

அரிக்கும் பிரமற்கும்
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும்
என்பது கேட் டுலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.

இவ்வனுபவ மொழிகள் தம் வாழ்வுடன் ஒத்துவருவதை அம்மையார் நினைந்தார். தவவாழ்வில் இது காணவேண்டிய ஓர் பகுதிதானே. இதை நான் தாங்கித்தானே ஆக வேண்டும் என்று ஆறுதலடைந்தார். இவ்வாறாக எதிர்ப்புகள் வரவர அம்மையாரின் பக்தியும் தவவாழ்வின் மீதான உறுதியும் அதிகரித்து வந்ததே அன்றி குறைவடையவில்லை.

மேற்படி மாணிக்கவாசகரின் அனுபவ மொழிப்பாடலிற்கு அம்மையார் பிற்காலத்தில் தெளிவான விளக்கங்களைக் கூறியுள்ளார்.

இப்பாடல் தொடர்பான அவர் கருத்து என்ன என்பதை பின்னைய வரலாற்றுப் பகுதிகளில் காண்போம்.

இவ்வாறாக அம்மையார் பல இடையூறுகளைச் சந்தித்து வரும் வேளையில் அம்மையாரின் தவ வாழ்வின் காவலனாக சுமார் முப்பது ஆண்டுகாலமாக இருந்து பணிபுரிந்த சுப்பிரமணிய சுவாமி அவர்களின் வருகை பற்றி இனிக் காண்போம்.

1955ம் ஆண்டளவில் சுவாமிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட சுப்பிரமணியம் என்பவர் கைதடி வடக்கில் வசித்து வந்தார். இவர் கைதடி தபாற் கந்தோரில் பணிபுரிந்து வந்தார். இவர் சுவாமிகளிடம் மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்டிருந்தார்.

ஓர் தினம் ஆச்சிரமக் குடிசையிலிருந்த சுவாமிகள் தமது அடியவரான சுப்பிரமணியத்தை அழைத்து வருமாறு ஓர் அன்பனிடம் கூறினார். யார் தம்மை அழைக்கிறார் களோவென எண்ணியபடி அங்கு வந்த அவர், தாம் அன்பு செய்யும் சுவாமிகளே எனக் கண்டதும் மனம் மிக மகிழ்ந்தார். சுவாமிகளும் அவரை அன்புடன் இருத்தி மறுதினம் அங்கு சேக்கிழார் குருபூசை நிகழ இருப்பதனால் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். வீட்டிலிருந்து தொழிலுக்குப் போகும் போதும், தொழில் முடிந்து வீட்டிற்கு திரும்பும் போதும் அவ்விடம் வந்து போகும் படியும், அம்மா காசு தருவார். தேவையான சாமான்களை அவருக்கு வாங்கிக் கொடுக்கும் படியும் கூறி வைத்தார். அவரும் சுவாமிகள் சொல்லிய பிரகாரமே செய்து வரலானார்.

இவ்வாறு இருக்கும் நாளில் சுவாமிகளின் அன்பர்கள் பலர் ஆச்சிரமத்துக்கு வரலாயினார். விசேட பூசைகளும் இங்கு நிகழ்ந்து வந்தன. சுவாமிகளிற்கு மாணாக்கர்களின் பணி விடைகளும் சிறப்புற நிகழ்ந்து வந்தன.

இக்காலங்களில் சுவாமிகளின் மாணாக்கராகிய பளைவேம்பொடு கேணி துரையப்பாவும் சுவாமிகளிடம் அடிக்கடி வருவார். அவர் சுவாமிகள் உணவருந்தியதும் அவருக்குப் படுக்கை விரித்துப் படுக்க வைப்பார். அம்மையாரிடம் "அம்மா, இப்ப சுவாமியை நித்திரையாக்கிறன் பாருங்கோ" என்று கூறிவிட்டு தாயுமானவர் பாடல்களை மனமுருகிப் பாடுவார். சுவாமிகளும் 'சும்மா' இருக்கும் சுகநிலைப்பேறு பெற்றவர். அவர் கண்களோ திறந்தபடி இருக்கும். ஆனால் அவர் அத்வை தானுபவத்தில் இருப்பார். செல்வச் சந்நிதி தம்புச் சுவாமியும் அடிக்கடி, "உடையார் சுவாமி பெரியவன் தான்" என்று குறிப்பிடுவார்.

(தொடரும்...

மற்றவர்களை சந்தோஷப் படுத்துபவனே உண்மையில் சந்தோஷப் படுகிறான்.

(தொடர்ச்சி..

உ

*01–08–2004இல் இருந்து*

# நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| அம்பிகை களஞ்சியம் மருத்துவமனை வீதி | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| T. குழந்தைவேல் | யாழ்ப்பாணம் (க.கு.க) | | 1மூடை அரிசி |
| N.S. படிகலிங்கம் | யாழ்ப்பாணம் (க.கு.க) | | 1மூடை அரிசி |
| த. பரராசசிங்கம் இந்து மகளிர் ஒழுங்கை யாழ்ப்பாணம் | | | 10கிலோ பை, 10புட்டி சம்பா |
| வினோ நகைமாடம் | யாழ்ப்பாணம் | | 1மூடை சம்பா |
| விமால் | கொழும்பு (க.கு.க) யாழ்ப்பாணம் | | 1000. 00 |
| சண்முகராசா | கொழும்பு (க.கு.க) யாழ்ப்பாணம் | | 1மூடை சம்பா |
| T. தியாகலிங்கம் S.V.M | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஐ. தங்கேஸ்வரன் (வங்கி) | கொழும்பு | | 3மூடை அரிசி, 10K பருப்பு |
| 63வர் குருபூசைமடம் (க.கு.க) யாழ்ப்பாணம் | | பொருட்கள் | 40,000. 00 |
| லீலாமில் | மருதனார்மடம் (க.கு.க) | | 1மூடை அரிசி |
| தி. துவாரகேஸ்வரன் ஈஸ்வரன்ரேடர்ஸ் | | யாழ்ப்பாணம் (பொருட்கள்) | 10,000.00 |
| குகன் ஸ்ரோர்ஸ் மருத்துவமனைவீதி, | | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| மனோகரன் (செறன்டிப் நிறுவனம்) | மகாராணி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| பேரம்பலம் சகநிறுவனம் | கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| நகுலா நகைமாடம் | ஸ்ரான்லி வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சுந்தரன் (மகாராணி) | | | 1மூடை அரிசி |
| இளவரசி (மகாராணி) | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| விஜித்தா ரெக்ஸ்ரைல்ஸ் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| சாந்தி புடவையகம் | நவீன சந்தை | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| குபேரன் களஞ்சியம் | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| மீரா விவேகானந்தன் | | லண்டன் | 6000. 00 |
| க. வேலுச்சாமி | | இன்பர்சிட்டி | 1000. 00 |
| S. மிகிர்தா | | கரவெட்டி | 1000. 00 |
| க. செல்வராசா ஆசிரியர் | | கட்டைவேலி | 1200. 00 |
| க. கமலன் | | லண்டன் | 1000. 00 |
| சி. செல்வரஞ்சன் | | அச்சுவேலி | 2000. 00 |
| நிவேதா நவரூபராசா | | வல்வெட்டி | 2000. 00 |
| சீ. அரியரத்தினம் | சுண்ணாகம் | 10கிலோ பை. 5 | 1மூடை அரிசி |
| பரஞ்சோதிமூலம் சத்தியாபரன் | | ஜேர்மனி (கோண்டாவில்) | 5000. 00 |
| ஸ்ரீதரன் | | பண்டத்தரிப்பு | 1மூடை அரிசி |

நாணயத்தைப் போன்றதோர் பரம்பரைச் சொத்தில்லை.


| | | | |
|---|---|---|---|
| சொக்கலிங்கம் செல்லத்துரை | காளிகோவிலடி | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| வே. சிவதாஸ் | | | 500. 00 |
| பொ. ஜெயராஜா | (லண்டன்) | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| நா. தெய்வேந்திரம் | இந்திரா கபே | நெல்லியடி | 3500. 00 |
| அம்பாள் ரேடர்ஸ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கிருஸ்ணா பீடாக்கடை | | வண்ணார்பண்ணை | 1மூடை அரிசி |
| S. திருநாவுக்கரசு | அப்புத்தளை(குகன் ஸ்ரோர்ஸ் மூலம்) | | 4மூடை அரிசி |
| கணபதிப்பிள்ளை | | கைதடி | 1மூடை அரிசி |
| ஓர் அன்பர் | க.கு.க மூலம் | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| சிவா பிரதேர்ஸ் | | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| Dr. செ.சிவசம்பு | | தொண்டைமானாறு | 5000. 00 |
| சோ. மோகனதாஸ் | | மல்லாகம் | 500. 00 |
| சி. ரமணன் | பிரதான வீதி | பருத்தித்துறை | 1000. 00 |
| S. கிஷோர் | | நீர்வேலி | 500. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | பத்தமேனி | 1000. 00 |
| திலகராஜா குடும்பம் | சுதுமலை | தொண்டைமானாறு | 5000. 00 |
| திருமதி சரோஜினி சக்திவேல் | | தொண்டைமானாறு | 2000. 00 |
| குணேஸ்வரி இராஜேந்திரம் | | புலோலி தெற்கு | 3000. 00 |
| சின்னத்தம்பி நாகராசா | | ஜேர்மனி | 5000. 00 |
| இராஜசுலோசினி | | சுண்ணாகம் | 2000. 00 |
| இராஜ ராகுலன் | | சுண்ணாகம் | 1000. 00 |
| Dr. P. சிவபாலன் | | கொழும்பு | 5000. 00 |
| திருமதி ஆ. ரஞ்சினி | | | 500. 00 |
| P. அப்புத்துரை | | வசாவிளான் | 2000. 00 |
| கணபதி களஞ்சியம் | | கரணவாய் | 1000. 00 |
| மு. கணேஸ் | | இணுவில் | 2மூடை அரிசி |
| சு. பரமநாதன் | | ஜேர்மனி | 20 யூரோ |
| இ. விஜாகன் | | ஜேர்மனி | 30 யூரோ |
| இ. நடராசா | | தாவடி | 5000. 00 |
| திருமதி த. சிவபாதம் | | தாவடி | 1000. 00 |
| தி. இராஜேஸ்வரன் | வடலி அடைப்பு | பண்டத்தரிப்பு | 1000. 00 |
| ச. சௌந்தரராஜன் | துர்க்கா நகைமாடம் | கன்னாதிட்டி | 10,000. 00 |
| வி. இராசலிங்கம் | நீதிமன்று வீதி | மல்லாகம் | 1மூடை அரிசி 3200. 00 |
| சந்நிதி முருகன் | 241 பருத்தித்துறை | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி |
| N. கேஷிநாதன் | | வேலணை மேற்கு | 2500. 00 |
| வேலாயுதம் ரவி | | வல்வை | 5000. 00 |
| N. ஜவகர்லால்நேரு | | லண்டன் | 4516. 00 |

மனத்தின் இருளே அறியாமை.

ஆச்சிரமத்தில் வழங்கப்படும் இலவச வைத்திய சேவையின் நிமித்தம் DR.M. யோகேஸ்வர தேவர் நோயாளரை பரிசோதிக்கும் நிகழ்வு.



இலவச வைத்திய சேவையின் நிமித்தம் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் மருந்துகள் வழங்கும் காட்சி.



உ

# சுனாமியேன் வந்ததிங்கே?

வீகடகவி மு. திருநாவுக்கரசு அவர்கள்.

கங்கையைத் தலையிற் சூடிக்
களி நடம் புரியும் ஈசன்
அங்கயற் கண்ணி நின்னை
அருகினில் இருத்திக் கொண்டே
செங்கதிர் புனலும் காற்றும்
சீறிடும் கடலும் தீயும்
பொங்கி வந்து அழித்திடாமற்
பூதலம் வியக்க ஆண்டீர்

இங்ஙனம் புவியைக் காத்த
இறையவன் உமையாள் ஒடு
பங்கம் தீர்முருகன் வேலும்
பார்புகழ் விநாயகனும் சேர்ந்து
தங்க நற் சூலம் தாங்கித்
தனிப் பெரு வயிரவரும் காக்க
எங்களைச் "சுனாமி" தாக்க
ஏனம்மா! பார்த்திருந்தீர்??

கோவிலைக் கட்டி விட்டுக்
குடமுழுக் காட்டி விட்டுக்
கோவிலுக்கு உரிமை கோரிக்
கோடேறி நிற்பதாலோ?
ஆவினை அடித்து கொன்று
அதைப் பகிர்ந்துண்பதாலோ?
பாவியாம் மகளிர் தம்மைப்
பதைத்திடக் கற்பழிப்பதாலோ??

குடிவெறி தலைக்கு ஏறிக்
குலமகளிரைக் கொல்வதாலோ?
கொடியவாள் கொண்டுவெட்டிக்
கொடுமைகள் செய்வதாலோ??

நெடிய போர் கண்டு நொந்து
நில மகள் நிலை குலைந்ததாலோ?
துடிதுடித் திறந்த ஆவி ஒன்றாய்த்
துயர் பகிர்ந்திட வந்ததாலோ??

செங்கோலும் இந்த நாட்டில்
சீர் குன்றிக் கொடுங்கோலாக
அங்கதைத் தூக்கிக் கொண்டு
அலறியே வெளியே ஓட
எங்கணும் அமைதி குன்றி
ஏங்கியே மக்கள் வாடாமல்
தங்கமே! தாயே!! அம்மா!!!
தயை புரிந்து எம்மைக் காப்பாய்

ஊழிக் கூத்தினையாடிக் காட்டி
உள்ளம் நீர் விரும்பியதால்
காளியாய் அன்னை நீயும்
கைகொட்டிச் சிரித்து ஆட
ஆழி பெருக் கெடுத்துப் பாய்ந்து
அழித்தது ஆசியாக் கண்டம் தன்னைப்
பழிமிகு இச் செயலைக் கண்டு
பரிதவித்து அலற மக்கள்

விழியினால் உலகை ஆளும்
விநாயகா! எங்குற்றாயோ?
ஒளி தரு உந்தன் வேலை
ஒளித்ததேன் முருகா? செப்பு
அழியட்டும் ஆசியாக் கண்டமென்று
அன்னையே! உளத்தில் எண்ணப்
பழி யென்ன செய்தார் மக்கள்
பாவிகள் ஆனோம் அம்மா!.


**ஆறுமுகத்தின் உண்மை**

ஆறுமுகனின் உண்மைகளை உணர்த்தும், கணபதி, பிரமா, திருமால், உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகிய இந்த ஆறுருவமும் முருகனுடைய சொரூபங்களே!

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



2004 ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் முடிந்துவிட்டன. ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களது எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருந்ததால் சந்நிதியான் ஆச்சிரமத்தினது அன்னதானச் செயற்பாடுகளும் படிப்படியாக அதிகரித்துச்சென்றதுடன் ஆச்சிரமத்தில் உள்ளவர்கள் அனைவரும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தனர். ஒன்பதாவது நாள் காலை 10.00 மணியளவில் திருநெல்வேலியில் இருந்து மரக்கறிகளை ஏற்றிக் கொண்டு சந்நிதி நோக்கிப்புறப்பட்ட அந்தக்கார் சராசரி வேகத்தில் சந்நிதி நோக்கி வந்து

கொண்டிருந்தது. வாகனத்திற்குள் இருக்கின்ற திரு சிவ ஆறுமுகசாமி, அதிபர் திரு க.ஆனந்தராஜா ஆகியோர் தாம் கொண்டு செல்லுகின்ற அந்த மரக்கறிகளை ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் கையளிப்பதற்குரிய தூரம் நெருங்கி விட்டதால் தம்மை அதற்காகத் தயாா்ப் படுத்திக்கொண்டார்கள். திரு சிவ ஆறுமுகசாமி அவர்களுக்கு சொந்தமான அந்தக் கார் ஆச்சிர மத்தின் வாசலில் பொருட்களை இறக்குவதற்கு வசதியாக வந்து தரித்து நின்றது.

அந்தச் சிறிய காரில் ஆறுமுகசாமி அவர்களின் குடும்பத்தினரும் ஆனந்தராசா அவர்களின் குடும்பத்தினரும் உற்சவ காலம் ஆனபடியால் வழமைக்கு மாறானமுறையில் அதிகளவு மரக்கறி வகைகளையும் ஏற்றிக் கொண்டு வந்ததைப்பார்த்து ஆச்சிரமத்தில் அந்நேரம் நின்ற அனைவரும் இந்தச் சிறிய காரில் இவ்வளவு ஆட்களும் பொருட்களும் வந்தனவா? என அதிசயித்து நின்றனர்.

நீண்ட தூரத்திலிருந்து வழமை போல மரக்கறிகளுடன் வந்து சேர்ந்த திரு சிவ ஆறுமுகசாமி, அதிபர் திரு க.ஆனந்தராஜா ஆகிய இருவரையும் இன்முகத்துடன் வரவேற்ற சுவாமிகள், அவர்கள் வாகனத்தில் கொண்டுவந்த மரக்கறிகளை விரைவாக இறக்கு வதற்குரிய ஒழுங்குகளையும் செய்து முடித்தார்கள்.

தாம் சந்நிதி ஆலயத்திற்கு வருகை தந்ததன் முக்கிய நோக்கம் நிறைவேறிய திருப்தியில் இருவரும் ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் தாம் ஆலயத்திற்குச் சென்று திரும்பி வருவதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு திரும்பவும் வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள். வாகனத்தைக் கோயிலடிக்குக் கொண்டு செல் வதற்காக இயந்திரத்தை இயக்கி வாகனத்தை ஓட்ட ஆரம்பித்ததுதான் தாமதம் வாகனத்தின் றொட் என்று சொல்லப்படும் மிக முக்கியமான அந்த இயந்திரப்பகுதி உடைந்து விட்டதை உணர்ந்து கொண்டனர்.

இவ்வாறு அந்த வாகனம் ஓடமுடியாத அளவுக்கு பழுதடைந்து விட்டது என்பதை அவர்கள் உறுதிப் படுத்திய பொழுது என்ன செய்வது என்று தெரியாது அனைவரும் குழப்ப மடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனாலும் நடந்துமுடிந்த சம்பவத்தை சிந்தித்த பொழுது மனதில் உடனடியாகவே ஒரு வியப்பு ஏற்பட்டது. ஆச்சிரமத்தில் மரக்கறிகளை இறக்கிய பின் இரண்டு அடிகள் கூட அசைக்க முடியாத கார் ஏறத்தாழ 20 கிலோமீற்றர் தூரம் மரக்கறிகளை ஆச்சிரமத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும் வரை எதுவுமே நடைபெறாது காரியம் நிறைவாக நிறைவேற்றப்பட்ட அதிசயத்தை சிந்திக்கத்தொடங்கி

எது கிடைத்தாலும் திருப்தியில்லாதவர்களுக்கு தேவை அதிகம்.

னார்கள். தற்செயலாக இடைநடுவில் இவ்வாறான ஒரு பழுது காருக்கு ஏற்பட்டால் தமது நிலைமை எவ்வளவு சங்கடமாக இருந்திருக்கும் என்பதையும் சீர் தூக்கி பார்க்க ஆரம்பித்த பொழுதுதான் தாம் பெரிய கஷ்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டதை உணர்ந்து கொண்டனர்.

இவ்வாறு அவர்களது உள்ளம் திருப்தியடைந்தாலும் அது ஒரு முழுமையான திருப்தியாக அமைந்துவிடவில்லை. காரணம் தாம் நிற்பதோ ஒரு ஆலயச்சூழல் தமது காருக்கு ஏற்பட்டிருப்பதோ பாரதூர மான பழுது இந்த நிலையில் வாகனத்தை எங்கே திருத்துவது, எப்படித்திருத்துவது, யார் மூலம் திருத்துவது இதற்கு எவ்வளவு காலதாமதம், பணச் செலவு என்பன ஏற்படும் என்பதைச் சிந்தித்த பொழுது தாம் எதிர்நோக்கியிருக்கும் சிரமங் களை நன்கு உணர்ந்து கொண்டார் கள். உண்மையில் அவர்கள் தமது வாகனத்தை அன்றையதினமே திருத்துவது அந்த வாகனத்தில் வீடு திரும்புவது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று என்பதை அவர்கள் பூரணமாக தெரிந்து கொண்டதனால்த்தான் தற்பொழுது நிலைகுலைய ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் அவர்கள் ஆபத்பாந்தவனாகிய சந்நிதியானிடம் தமது கஷ்டத்தை ஒப்புவிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இவ்வாறு சந்நிதியானிடம் தமது மனக்குறையை முறையிட்ட அதே நேரம் ஆச்சிரமத்துக்குள் சென்று ஆச்சிரமத்தின் சுவாமிகளிடமும் தமது இக்கட்டான நிலையை இங்கிதமாக எடுத்துக்கூறினார்கள்.

பொதுவாக ஆலயத்திற்கும், ஆச்சிரமத்திற்கும் வருகை தருகின்ற அன்பர்கள் பூரணதிருப்தியுடன் திரும்பிச் செல்ல வேண்டுமென்று எதிர் பார்க்கின்ற சுவாமிகள், அவர்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை உணர்ந்து மிகவும் மனம் வருந்தி னார்கள் இந்தநிலையில் இவர்களுக்கு தான் எப்படி உதவமுடியும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது இவ்வாறான வேலைகளைச் செய்யக் கூடிய ஆற்றல் உள்ள மட்டுவிலைச் சேர்ந்த கிருபா என்ற அன்பர் அங்கே ஆச்சிரம வளவிற்குள் தென்பட்டதை சுவாமிகள் கண்டு கொண்டார்கள். உடனடியாகவே அவரை அழைத்து வேண்டிய உதவிகளைச் செய்து உதவுமாறு கிருபா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

மட்டுவிலைச் சேர்ந்த கிருபா என்பவர் வாகனத்தில் உடைந்த பகுதிகளைக் கழட்டி அதனை நெல்லியடிக்கு கொண்டு சென்று அங்கே அதனைத் திருத்தி மீண்டும் அதனைக் கொண்டுவந்து வாகனத்தில் பொருத்தி இயல்பான நிலையில் காரை இயக்கும் நிலைக்கு தயார்ப்படுத்தி விட்டார்கள்.

தமது காருக்கு ஏற்பட்ட பழுதினை இங்கே திருத்த முடியுமா

உயர்ந்த நேர்மையில்தான் அதிகப் பணிவு இருக்கும்.

தாங்கள் இன்று காரில் வீடு திரும்பலாமா என்று கவலையில் மூழ்கியவர்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வேலைகள் அனைத்தும் திருப்தியாகவும் இவ்வளவு குறுகிய நேரத்தில் முடிவடைந்து விட்டதை உண்மையில் அவர்களால் நம்பமுடியவில்லை.

திரு சிவ ஆறுமுகசாமி, அதிபர் திரு க.ஆனந்தராசா ஆகிய இருவரும் சந்நிதியானுடைய திருவருளிலும் சந்நிதியில் இடம்பெறுகின்ற அற்புத நிகழ்வுகள் தொடர்பாகவும் ஆழமான நம்பிக்கையும் விசுவாசமும் உள்ளவர்கள். இதே போன்று சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெள்ளி நிகழ்வுகள் மற்றும் விஷேட நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவதுடன் இங்கே இடம்பெறுபவை எல்லாம் சந்நிதியானுடைய திருவருளாலேயே இடம்பெறுகின்றன என்ற உண்மையை உணர்ந்தவர்கள்.

இங்கே நித்திய அன்னதானப் பணிக்கு பங்களிப்பு செய்யவேண்டுமென்ற அவர்களது சிந்தனையையும் செயலும் தூய்மையுடன் இடம்பெற்ற நிலையில் சந்நிதியான் அதைவிடவும் ஆழமான அருளை அவர்களுக்கு அள்ளி வழங்கி அவர்களது சிந்தனையையும் செயலையும் மேலும் புனிதம் நிறைந்ததாக்கியுள்ள அற்புதத்தை அவர்களுக்கு நிதர்சனமாக்கியுள்ளான்.

சந்நிதியான் தன்னை வழிபட வருகின்ற அடியார்களுக்கு நிறைவாக அன்னதானத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றான் என்பது அனைவரும் அறிந்த விடயம். அதனால் தான் அவனை அன்னதானக்கந்தன் என்றும் அழைக்கின்றோம். இதே போன்று அன்னதானத்தை வழங்குவதற்கு பொருளையோ, நிதியையோ வழங்க விரும்புகின்றவர்களது விருப்பங்கள், தேவைகள் என்பவற்றை நிறைவேற்றி அவர்களது துன்பங்கள் கஷ்டங்களை நீக்கி அவர்களை அவர்களது பணியில் திருப்தியுடன் ஈடுபடுவதற்கும் பலவிதமான அற்புதங்களைச் சந்நிதியான் தினமும் நிகழ்த்துகின்றான் என்பதை மேற்படி சம்பவத்தின் மூலம் எங்களால் நன்கு உணரமுடிகின்றதல்லவா. இதுதான் சந்நிதியானின் தனித்துவமும்கூட.

ஓம் முருகா!

## திருவாசகப் பணிமனை.

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் 101ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

காலம்:- 27.03.2005 ஞாயிறு காலை 6மணி தொடக்கம் பகல் அன்னதானம்

இடம்:- பம்பலப்பிட்டி 31A ஜானகிலேன், திருவாசகம் பணிமனை.

பணத்தை ஏவலனாக வைத்திருக்காவிட்டால் அது உன் எஜமானனாகிவிடும்.

உ

# ஆண்டு எட்டைக்காணும் ஞானச்சுடர் மலரே
# பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழி! வாழி!

சிவஞானச்செல்வர் சி.சி. வரதராசா J. P அவர்கள்.

ஆதியும் அந்தமும் இல்லாத சைவ சமயத்தின் ஆத்மீகமலர் என்றிடில்
மிகையாகாது யாவரும் ஞானச்சுடர் மலர் என்பர்
புனிதமான அறிவு நல் ஆக்கங்கள் சிறப்புடன் தந்திடும்
ஒளி விளக்கே ஞானச்சுடரே வாழி! வாழி!

பாரம்பரிய சிவபூமியில் உலாவரும் மக்கள் யாவரும் நித்தமும்
சிறந்த தெய்வீக அறநெறிகள் தந்திடும் பொக்கிசமாய்
தெய்வீகம் கமழ்கின்ற சைவசிந்தனை ஊட்டும் ஞானச்சுடரே!
நீடூழி காலம் வாழ்க! வளர்க! என்றும் நிலைத்து வாழி! வாழி!

தர்ம வழியில் இறைபணியை உள்ளன்புடன் பரப்பி
உலகமெல்லாம் அன்புடன் நல் வழி காட்டி
மனச்சுவை தந்து நம் புனிதமான வாழ்வை தூய்மையாக்கி
அக இருள் நீக்கும் ஞானச்சுடரே! நீடூழி வாழி! வாழி!

நற்பணிகள் குன்றாத சந்நிதியான் ஆச்சிரமம்
நற்சேவைகள் பற்பல நன்றாக ஆற்றிவர
ஆற்றங்கரை வேல்முருகன் ஆறுமுகனின் அருளோடு
ஆண்டுகள் பல்லாண்டு காலம் மென்மேலும் வாழ்க
பொற்சேவைகள் செய்து நற்புகழ் பெற்று நீடூழி காலம் வாழ்க
இலட்சுமி கடாட்ச நல்லொளி காட்டும் ஞானச்சுடர் மலரே வாழி!

துணிவுள்ள நெஞ்சுரமே கொண்டு
சிவபூமியில் பல தடைகள் தாண்டி
தகவுசால் ஆண்டு எட்டைக்காணும்
எல்லோர்க்கும் சந்நிதியான் பெரும் புகழ்பேசும்
ஒளிவிளக்கே தெய்வாம்சம் உள்ள ஞானச்சுடரே!
ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி நீடூழிகாலம் வாழி! வாழி!

உ

# ஞானச்சுடர் வாசகர் போட்டிக்கான விடைகள்

1) பாணபத்திரனுக்கு
2) சூரபத்மன்
3) மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்கள்
4) குகன்
5) உருத்திரர் பதினொருவரையும், சக்தியையும்
6) நெடுமால்
7) திருப்பறியலூர்
8) திருவண்ணாமலை
9) நாராயணாஸ்திரம்
10) மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்
11) சூடுபடவேண்டும்
12) மனிதரில் தேவர், மனிதரில் மனிதர், மனிதரில் விலங்கு
13) திரு நாகலிங்கம், திரு சிவகுமார் ஆகியோருக்கு
14) சரவணப்பொய்கை
15) சிவபரம்பொருள்
16) ஏவாமலே செய்வார்க்கு
17) கார்த்திகைமாதச் சுக்கில பக்கத்துவாதசித் திதி
18) ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்
19) வியாழ பகவான்
20) திருக்கோவிலில் இறைவனை வழிபடுவதற்கு
21) ஆண்டாள்
22) பாவ, புண்ணியங்கள்
23) பதஞ்சலி முனிவர்
24) தன்புகழை வெளியே தெரியாமல் மறைத்து வாழ்தல்
25) அன்பர் சின்னராசா

நல்ல அண்டை வீட்டுக்காரன் விலைமதிப்பற்றவன்.

உ

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

04-03-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## இசைச் சொற்பொழிவு:- மெய்ப்பொருள் நாயனார்

வழங்குபவர்:- M.S. ஸ்ரீ தயாளன் (உதவிக் கல்விப்பணிப்பாளர் யாழ்)

(பக்கவாத்திய சகிதம்)

---

11-03-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

(உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்கள்)

---

18-03-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர்:- சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்

(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25-03-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## பங்குனி - 2005

வெளியீட்டுரை:- செ. பரமேஸ்வரன்

(ஆசிரியர் வசாவிளான் ம. மகா வித்தியாலயம்)

மதிப்புரை:- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

உதவிப்பணிப்பாளர் (இந்து கலாச்சார அமைச்சு)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

**ஜனவரி**
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

**பெப்ரவரி**
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

**மார்ச்**
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

**ஏப்ரல்**
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

**மே**
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

**ஜூன்**
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

**ஜூலை**
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

**ஆகஸ்ட்**
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

**செப்ரெம்பர்**
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

**ஒக்ரோபர்**
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

**நவம்பர்**
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

**டிசம்பர்**
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005